நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)




புயல் வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
தொழில் காட்டப் புவன வாழ்க்கைச்
செயல் வண்ணம் நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வோம்!

— கலிங்கத்துப்பரணி

அக்டோபர் 1982

நன்றி அறிவிப்பு



என் தந்தை உயர்திரு சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார்-கண்ணாத்தாள் ஆச்சி யின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 8-9-82 அன்று ஒக்கூரில் நடைபெற்றபோது நேரில் வந்து வாழ்த்திய பெரியோர்கள், சான்றோர்கள், தொழிலதி பர்கள், நண்பர்களுக்கும் தந்தி தபால் மூலம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எங்கள் உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மணி விழாச் சிறப்புற நடைபெற எல்லா வகை யாலும் உதவி செய்த ஆசிரியர்கள், ஆசிரியைகள் நண்பர்கள் மற்றும் எங்கள் நிறுவன ஊழியர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ராம. சோமசுந்தரம்

சிக. அரு. க. அரு. சோமசுந்தரம்
செட்டியார் அன் கோ.,
நூல் வியாபாரம், மதுரை.
கிளைகள் : திருப்பூர், கல்கத்தா.

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 1

ஒலி 9

துந்துபி

புரட்டாசி

அக்டோபர்

1982

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001

தொலைபேசி : p. p. 26668

"தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையிலே முழக்கிடுவோர் சாதிக்கே வாழுமட்டும்
நாமும் நமது குல நலம் காணப் பேரிடுவோம்
நகரத்தார் நலஉலகை நாளைக்கே நாம் சமைப்போம்"

— கண்ணதாசன்

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

தனி இதழ் ரூ. 1-00
ஆண்டுச் சந்தா ரூ. 12-00

91/1

என்ன மானி! ஒரு தாக்கல்...

மதுரை நகரத்தார் சங்கத் தலைவர் சுப.அ.நடராசன் செட்டியார் அவர்கள் வீட்டில் விருந்து. எல்லா முக்கிய புள்ளிகளும் வந்திருந்தனர். பேச்சு ''நகரத்தார் குரலைப் பற்றித் திரும்பியது. ''நம்முடைய பெண்டுகள் படிக்கும் வண்ணம் இதழைச் சற்று மாற்ற வேண்டும்'' என்றேன்.

உடனே வ. நா. சிதம்பரம் செட்டியார் அவர்கள் இந்த இதழைத் தயாரிக்கும் பொறுப்பை என்னிடமே விட்டுவிட்டார்கள். இந்த மாதிரி ஏதாவது சொல்லிக்கொண்டே இருக்கிறவர்களை அவர்கள் இப்படித்தான் விநோதமாகத் தண்டிப்பார்கள் என்று பின்னால் தெரிந்து கொண்டேன். இனி விருந்துக்குப் போனால் நான் ஏன், வாய் திறக்கப் போகிறேன்! வெள்ளைப் பணியாரத்திற்கு மட்டும்தான் வாய் திறக்க வேண்டும்!

பெண்கள் மாறினால்தான் சமுதாயம் மாறும்; நம்முடைய பெண்டுகளையே சமூகச் சிக்கல்கள் குறித்துச் சிந்திக்க வைத்து அதைப் பேட்டிக் கட்டுரையாக வெளியிட்டிருக்கிறோம்.

அப்புறம் இந்த நாளையப் பெண்களின் கதை ரசனையை மனதில் கொண்டு ஒரு சிறுகதை வெளியிட்டிருக்கிறோம். பெற்றோர்கள் தங்கள் நிலைகளை மட்டுமே எண்ணித் திருமண ஏற்பாடுகளைச் செய்வதால் இளம் பெண்களின் இளமைக் கனவுகள் எப்படி ஈவிரக்கம் இல்லாமல் நொறுக்கப்படுகின்றன ; விருப்பத்திற்கேற்ற ஆமக்களைப் பெற முடியாமல் பெற்றோரின் வசதிக்கேற்ற ஆமக்களைப் பெற வேண்டிய நிலையில் நம்முடைய பெண்கள் எவ்வளவு கண்ணீர் வடிக்கநேரிடுகிறது என்பதைக் கதையில் வடித்திருக்கிறார், கண்டனூர் மெ. மெய்யப்பன். அவர் சமூகவியல் படித்தவர்; சென்னை ''தினத்தந்தி''யில் துணையாசிரியராகப் பணியாற்றுகிறார். தலையிலுள்ள மயிரெல்லாம் கொட்டி ருசிய எழுத்தாளர் செகாவ் மாதிரிக் காட்சியளிப்பார். அது சிந்தனைத் தோற்றம்!

ஒரு புனிதப் பயணக் கட்டுரையும் இந்த இதழில் வெளியிடப் பட்டுள்ளது. அதை எழுதியவர் டாக்டர் ஆறு. அழகப்பன். அவர் செட்டிநாட்டுக்கு மட்டுமில்லை தமிழ்நாட்டுக்கே நன்கு அறிமுகமானவர். அவருடைய எழுத்து இந்த இதழுக்குப் பெருமை சேர்க்கிறது!

பளபளப்பான திரைத்துறையை உள்ளும் புறமும் படம் பிடித்துக் காட்டுகிறார் திரைப்பட இயக்குநர் காரைக்குடி நாராயணன். இது ஒரு பேட்டிக் கட்டுரை. அந்தக் கட்டுரையின் தலைப்பே அவர் எவ்வளவு தூரம் அடிபட்டு இந்தத் துறையை ஆழ நீளமாக அறிந்திருக்கிறார் என்பதைக் காட்டும்!

பேட்டி கண்டவர் இந்தப் பத்திரிகையின் துணையாசிரியர் எல். சுந்தரம் பேட்டி காண்பதிலும் பேட்டிக் கட்டுரை எழுதுவதிலும் இவருக்கு நிகராக ஒரு சிலரே இருக்க முடியும்!


எல்லாவற்றிற்கும் மேலாக இந்த இதழுக்கே மகுடம் சூட்டியதுபோல 'வாழையடி வாழை' என்ற தலைப்பில் நகரத்தார் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அஃதோர் தொடர் கட்டுரை. பின்னர் இது நூல் வடிவம் பெற இருக்கிறது. இனி யாரும் 'நகரத்தார் குரலை' வீசைக்குப் போடமுடியாது; சேர்த்துவைக்க வேண்டிய கருவூலமாகி விட்டது! இத்தொடர் கட்டுரை ஆசிரியர் 'குருத்து'. இஃது அந்த ஆசிரியரின் புனைப் பெயர். தன் பெயரைக் கட்டுரை முடிவில்வெளியிட்டுக் கொள்ளலாம் என்று அவர் கூறிவிட்டார். இவர் வள்ளலார் நெறியில் நிற்பவர்; அறிஞர்; ஆய்வுப் பார்வை உடையவர். வ.சுப. மாணிக்கத்திற்கு அடுத்தபடியில் வைத்து மதிக்கத்தக்கவர்.

ஒரு தொடர் கதை வாங்கிப் போட எனக்குத் தமிழ் கற்பித்த ஆசான் தமிழண்ணலுக்குத் தொலைபேசி போட்டுப்போட்டுப் பார்த்தேன். தொட்டியில் பிள்ளையை அழுது கதற விட்டுவிட்டு ஆத்தாக்காரி அடுத்த வீட்டுக்கு வெட்டிக் கதை பேசப் போய்விடுவதுபோல் பல்கலைக் கழகத்தில் அனைத் தொலைபேசியை எடுத்து அரவணைக்க ஆளில்லை. வாழ்க ஜனநாயகம்!

என்னுடைய வழிகாட்டி, நெடுங்காலத் தவத்தினால் தமிழன்னை பெற்ற தலைமகன் வ. சுப. மாணிக்கம் அவர்களோடு நெடுந் தொலைவுத் தொலைபேசி அழைப்பின் வாயிலாகத் தொடர்பு கொள்ள முயன்றேன். அவர்கள் ஊரிலில்லை; இவர்கள் இருவரின் எழுத்தும் மொழிக்கும் தமிழின் மேம்பாட்டுக்கும் பயன்படுவது போல நகரத்தார்க்கும் பயன்பட வேண்டும்.

அடுத்த இதழிலிருந்தாவது அவர்கள் எழுத வேண்டும். அதற்குத்தான் இவ்வளவு தாலாட்டும்!

இறுதியாக ஒன்று! இந்த இதழைத் தயாரிக்க எனக்கு யோசனை பாசனை சொல்லிப் பக்கத்திலேயே இருந்து உதவியவர் வலம்புரி அச்சக உரிமையாளர் செவ்வூர் கரு. சிதம்பரம்! 'என்ன சிதம்பரம்' ரெண்டும் ரெண்டும் நாலுதானே; அப்படியே போட்டறலாமில்ல' என்று கேட்பேன். 'ஆமாண்ணே! அப்படியே போடுங்க'ன்னு சிதம்பரம் சொன்னால் தான் எனக்கு மனம் ஆறும்.



சிதம்பரத்தின் மனைவி சொல்கிறார்களாம்: 'தினம் இந்தப் பழ. கருப்பையாவைப் பார்க்காட்டி என்ன? அப்படி என்னதான் இருக்கும்? நான் நாத்தா வீட்டுக்குப் போயிருக்கயிலே போய் நாலஞ்சு நாளாச்சேன்னு ஒருக்காக்கூட இப்படித் தேடி வரலையே உங்களுக்கு'!

அவ்வளவு கிளை நானும் சிதம்பரமும். சிதம்பரம் சிறந்த தமிழ்ப் பற்றாளர்; தனித் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர்; தமிழர்ச்சனை மாநாட்டின் செயலர்; இவரில்லாமல் இந்த இதழ் இல்லை!

என்ன மானி...! ஒரு தாக்கல்னு சொல்லி ஊரம்பிட்டுத் தாக்கல் சொல்றேன்னு கோபமா?

பழ. கருப்பையா



வாழையடி வாழை

'நாட்டுக்கோட்டை நகரத்தார்', 'மகுட தன வைசியர்', 'தன வணிகர்' – என்ற பெயர்கள் கொண்ட குலத்தினர், தமிழகத்தில் குறைந்த எண்ணிக்கையுடையவரேனும், நிறைந்த புகழுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வேறு எந்தக் குலத்தினரும் கொள்ளாத வகையில், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் ஜோதியாகிய சிவபெருமானையே குல முதல்வனுகக் கொண்டு, பன்னெடுங் காலமாக அவனை வழிபட்டும், அவன் எழுந்தருளியுள்ள கோயில்களில் திருப்பணிசெய்தும் வாழையடி வாழையாகத் தழைத்து வருகின்றனர். சிவபெருமானை மாணிக்கவாசகர், ''போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே'' எனப் பரவி வாழ்த்தியதற்கு ஏற்ப, நடைமுறையில் அப்பெருமானைத் தம் வாழ்விற்கும் வளத்திற்கும் அடி முதலாகக் கொண்ட குலத்தினர் நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆவர்.

குலமும் கோயிலும்

நகரத்தார் குலம் ஒன்பது பிரிவுகளாக வாழ்ந்து வருகிறது. குலப்பிரிவுகளை மற்றும் சில குலத்தினர் 'கோத்திரம்' என்பர். நகரத்தார் மட்டும் 'கோயில்' என்று வழங்குவர். கோத்திரங்கள் பண்டைய முனிவர்கள் பெயரால் அமைந்துள்ளன. ஆனல், கோயில்கள் ஒன்பதும் செட்டிநாட்டில் உள்ள சிவபெருமான் திருக்கோயில்களே. சிவபெருமான் அருள் வழங்கும் கோலத்துடன், சதாசிவ மூர்த்தியாய், சிவலிங்கப் பெருமாணுய் வீற்றிருக்கும் இவ்வொன்பது கோயில்களும் செட்டியார் குலத்தின் மூலத்தானங்கள். அவற்றின் வரிசை முறை வருமாறு :-

இளையாத்தான்குடிக் கோயில்
மாற்றூர்க் கோயில்
வயிரவன் கோயில்
இரணியூர்க் கோயில்
பிள்ளையார்பட்டிக் கோயில்

குருத்து

நேமங் கோயில்
இலுப்பைக்குடிக் கோயில்
சூரைக்குடிக் கோயில்
வேலங்குடிக் கோயில்

இவ்வொன்பது திருக்கோயில்களிலேயே நாட்டுக்கோட்டை நகரத்தாரின் பாண்டிய நாட்டு வாழ்க்கை தொடங்கிற்று. அவர்கள் ஏழு வழி நகரத்தார் என்று பெயர் பெற்றிருந்தனர். பாண்டிய மன்னரிடம் இக்கோயில்களின் ஆட்சியை வேண்டிப் பெற்று அவற்றைச் சூழ இருந்து வாழத் தொடங்கினர். இவற்றுள் முதன் முதலாக, நகரத்தார்களின் ஏழு பிரிவினரும் இளையாத்தான் குடியில் குடி புகுந்தனர். இளையாத்தான் என்பது அங்ஙனம் குடிபுகுந்

தோரில் சிறப்புடைய ஒருவரது பெயராதல் வேண்டும். காலப் போக்கில் ஏழு பிரிவினர், ஒன்பது பிரிவினராக வளர்ந்தனர். இங்ஙனம் புதுப் பிரிவுகளாகத் தோன்றியவை இரணியூர்க் கோயிலும் பிள்ளையார்பட்டியும் ஆகும். இவர்கள் இளையாத்தான்குடியுட்பட்ட ஒன்பது ஊர்களில் வாழ்ந்தனர். இளையாத்தான் குடியிலிருந்து ஏனைய எட்டுக் கோயிலாரும் பிரிந்து சென்றதன் நினைவாக அவ்வூரில் எட்டுப் பிரிவினருக்கும் பிள்ளை கோயில்கள் உள்ளன.

இவர்கள் பின்னர் வளமும் வாழ்வும் எண்ணிக்கையும் பெருக்கி 96 ஊர்களில் வாழத் தொடங்கினர். இன்று ஒரு செட்டியார் குடும்பத்தினர் கூட இவ்வொன்பது கோயில்கள் உள்ள ஊர்களில் வாழவில்லை. இவை இன்று நகரத்தார்களுக்கு வழிபடும் இடங்களாக மட்டும் உள்ளன. ஆனால், இன்றும் அவர்களுக்கு ஒரு வகையில் வாழ்க்கை தொடங்கும் இடம் இக்கோயில்கள் தாம்.

ஒவ்வொரு நகரத்தார் இளைஞன், பெண் ஆகியோரின் திருமணமும் அவரவர் சார்ந்த கோயிலில் முன்னதாகப் பதிவு செய்யப் பெற்று, அங்கிருந்து திருமண மாலை அனுப்பப்பெற்று, நிகழ்ந்து வருகின்றது. அக் கோயிலில் அர்ச்சனை செய்து இறைவனின் பிரசாதமும் மாலையுடன் அனுப்பப் பெறும். அது திருமணத்திற்குக் குலமுதல்வனான சிவபெருமானின் வாழ்த்து ஆகும். திருமணத்தைக் கோயிலில் பதிவு செய்வதற்குப் ''பாக்கு வைத்தல்'' என்று பெயர். திருமணம் நிச்சயம் ஆவதை இப் பெயர் குறிக்கிறது. பிற குலத்தார் திருமண நிச்சய நிகழ்ச்சியை 'நிச்சய தாம்பூலம்' என்பர். நகரத்தார்கள் ஊரில் திருமணம் 'பேசி முடித்து', 'கெட்டிபண்ணி', 'முகூர்த்தமும் வைத்துப்' பின்னர்க் கோயிலில் பதிவு செய்தலைத் தான் 'பாக்கு வைத்தல்' என்று கூறுகின்றனர். இது இறைவனின் திருமுன்னர் அவர்கள் வாழ்க்கையைத் தொடங்குவதைக் குறிப்பிடுகின்றது. நகரத்தார் வணிகர் ஆதலின், பேசி முடித்தலோடு அமையாமல், உறுதியும் செய்துகொள்கின்றனர். பேசி முடித்தலைப் பொது இடத்தில் வைத்துக் கெட்டி பண்ணுவதை மணமகன் வீட்டில் நடத்துவர். முகூர்த்தம் வைத்தல் சடங்கு மணமகள் வீட்டில் நிகழும். அன்றைக்கே திருமணக் கொட்டகைக்கு முகூர்த்தக்கால் ஊன்றி வைப்பார்கள்.

நகரத்தார் திருமணத்தைக் குலமுதலாகிய கோயில்களில் பதிவு செய்யும் முறையே அதைச் சட்டபூர்வமானதாக்குகின்றது. இந்த முறை, இந்துக்களுள் நகரத்தார்களிடம் மட்டும் உள்ளது. கிறித்தவர் தமக்குரிய மாதா கோயிலில் திருமணத்தைப் பதிவு செய்வர். கோயிலில் திருமணம் பதிவு செய்யப்பட்டு, அந்த மணவினை நிறைவேறியபின் மணமகன் தனது

என் தமிழ்ப் புலமையை மதித்து என்னைக் கேளாமலேயே 'தமிழ்க் கடல்' இராய. சொ., டாக்டர் அழகப்ப செட்டியாரைச் சந்தித்து அழகப்பா கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு என்னைப் பரிந்துரை செய்தார். அதற்கு அன்று ஏகப்பட்ட எதிர்ப்பு இருந்தது. அந்தஎதிர்ப்பை முறியடித்து என்னைப் பேராசிரியராக்கியவர் இராய. சொ.

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
(மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)

கோயிலின் புள்ளியாகக் கருதப் படுவான். கோயிலில் அவன் செலுத்தும் வரி 'புள்ளிவரி' எனப் படும். அவனும் மனைவியும் சேர்ந்து 'ஒரு புள்ளி' ஆகின்றனர். ஆகவே புள்ளி என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும். ஆங்கிலத்தில் புள்ளியை 'Unit' எனலாம். இத்தம்பதிக்கு மக்கள் பிறந்து, அவர்கட்குத் திருமணம் ஆகும் வரை அனைவரும் சேர்ந்து ஒரு 'புள்ளி' யாகவே கருதப்படுவார்கள். ஒரு குடும்பம் ஒரு புள்ளி என்ற முறையில், குடும்ப அளவில் இறைவனுக்கு ஆட்படும் தன்மையைக் 'கோயில் புள்ளி' என்ற பெயர் குறிப்பிடுகிறது. ''வம்பெனப் பழுத்து என்குடி முழுதாண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே'' என மாணிக்கவாசகர் சிவபெருமானைப் பாடிப் பரவுவது இங்குக் கருதத் தக்கது.

இவ்வாறு குடிவழியாகச் சிவனுக்கு ஆட்பட்டமையால்தான், செட்டியார்களில் ஒருவரும், வாழையடி வாழையென வந்த அந்தச் சிவ மரபை—சைவ சமய வாழ்வை — மாற்ற மனங்கொள்ளாமல் இன்றளவும் மத மாற்றம் செய்து கொள்ளாமல் வாழ்கின்றனர். மதமாற்றம் செய்யாத சாதி நகரத்தார் சாதி ஒன்றே என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

செட்டியார்கள் தம் குலத் தந்தையாகச் சிவபிரானைக் கொண்டமையால் அவனுடைய பிள்ளைகள் ஆவர். 'செட்டிப் பிள்ளைகள்' என்று இவ்வினத்தாரை அழைக்கும் வழக்கு நோக்கத்தக்கது. இந்த மரபை ஒட்டித்தான் போலும் சிவனுடைய இளைய பிள்ளையான முருகனைச் 'செட்டி' என வழங்கும் பெயர் உண்டாயிற்று! சுந்தரமூர்த்திநாயனுர் தம் தேவாரத்தில்,

''செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூரானை மறக்கதுமாமே''

என்று பாடுகின்ருர். செட்டி என்பவன் முருகன். செட்டிக்குஅப்பன் சிவபிரான். இன்றும் செட்டியப்பன் என்ற பெயர் செட்டியார் மரபினர்க்கு இடப் பெறுகிறது.

(தொடரும்)



ஆ. தெக்கூர் நகரச் சிவன்கோவில் குடமுழுக்கு விழாப் பட்டி மண்டப மேடையில் பேராசிரியர் கண. சிற்சபேசன், சிவநெறிச் செல்வர் கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார், பழ. கருப்பையா, ந. எழிலரசன் ஆகியோர்.

அரேபிய நாட்டில் உள்ள சில உண்மைகள் :

அரேபியாவில் யாருக்கும் விற்பனை வரி, வருமான வரி கிடையாது.
ரேடியோ, டெலிவிஷன் ஆகியவைகளுக்கு லைசென்ஸ் கிடையாது.
இங்கு பெட்ரோல் லிட்டர் 45 காசு; தண்ணீர் லிட்டர் 6 ரூபாய்.
இங்கு பணிபுரிவதற்கு Working permit அவசியம் தேவை.
இங்கு பலருடைய வீட்டின் பின்புறமுள்ள தோட்டங்களிலேயே பெட்ரோல் கிணறுகள் உள்ளன.
இங்கு திருட்டுப் பயம் சுத்தமாகக் கிடையாது.
இங்கு நாமே தபாலாபீசிலிருந்து நமது தபாலை எடுத்து வர வேண்டும்.
இங்கு ஓடும் டாக்சிகள் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டவை.
இங்கு குடும்பக் கட்டுப்பாடு செய்தால் கடும் தண்டனை கிடைக்கும்.
இங்கு யார் எதைச் சொன்னாலும் 'இன்ஷாலா' என்கிறார்கள்.
அதற்குக் 'கடவுள் அருள்படி' என்று அர்த்தம்.

தொகுத்தவர்:
கார்த்திகை மடம், தே. சுப்பிரமணியன்,
வேந்தன்பட்டி.

கண்ணீரில் கரைந்த கனவுகள்



கண்டனூர்
மெ.மெய்யப்பன்

மாடிப்படிகளில் ஏறி, வீட்டுக்குள் நுழைந்து, செருப்பைக் கழட்டியபோது வழக்கமான செருப்புகளுக்கு மத்தியில் புதிய ஜோடி செருப்பு கிடந்தது. புதியவரின் வரவை அது புரிய வைத்தது.

அவர் யாராக இருக்கும் என்று யோசித்தபடி, உமையாள் தோளில் தொங்கிய சாக்குப் பையை மேஜையில் 'தொப்'பென்று போட்டாள். மேஜைக்குக் கீழே, சிகரெட் பெட்டி வீடு கட்டிக் கொண்டிருந்த கடைசித் தங்கை கமலா, ''பெரியத்தா வந்திருக்காங்க'' என்று வீட்டுச் செய்தியை வாசித்தாள்.

''பெரியத்தாவா, என்ன திடீர் விஜயம்? கல்யாணப் பேச்சை விட்டால் வேறு என்ன காரணம் இருக்க முடியும்! அப்படியானால் என்னைப் பயமுறுத்தி, மிரட்டி இந்த இடத்துக்கு ஒத்துக்க வைக்கப் பார்க்கிறாளா'' பெரியத்தாளை நினைத்தாலே பயம்தான் - இது வரைக்கும். ஆனால் இந்த விஷயத்தில் மட்டும் அவள் பெரியத்தாளுக்குப் பயப்படப்போவதில்லை என்று நினைத்தபடி வீட்டிற்குள் நுழைகிறாள்.

உமாவின் தாய், அடுக்கடுக்காகக் குழந்தைகளைப் பெற்று விட்டு, எந்தப் பிள்ளை அழுகிறது, எந்தப் பிள்ளைக்கு உடல் நோவு, யாரைக் கவனிப்பது என்றெல்லாம் புரியாமல் திண்டாடிய போது, ஒரே ஒரு அரசை மட்டும் பெற்றுவிட்டு, 'அக்கடா' என்று இருந்த பெரியத்தாள்தான் தங்கை படும் பாட்டைப் பார்த்து மனமிரங்கி உமையாளைக் கொண்டு போய்த் தன்னுடன் வளர்த்தாள்.

அவளுடைய நெடிய படர்ந்த உருவமும், நிமிர்ந்து கம்பீரமாக நின்ற மூக்கும் மட்டும் அல்லாமல்

சிறுகதை

அவள் காட்டிய கண்டிப்பும் உமையாளைப் பயமுறுத்தத்தான் செய்தன.

பள்ளிப் படிப்பை பெரியத்தாள் வீட்டில் - பள்ளத்தூரில் முடித்து விட்டு, பி. எஸ்சி. மனை இயல் படிப்புக்காக சென்னைக்கு வந்து விட்டாலும், அந்தச் சிறு பிராயத்துப் பயம் இன்னும் உமையாளை விட்டுப் போகத்தான் இல்லை.

உள் அறையில் படுத்திருந்தவளைப் பார்த்ததும், ''வாங்க பெரியத்தா'' என்று உமையாள் வரவேற்றதும், ''என்னடி ஒமயா

முதலாமவர் : எங்க வீட்டு மேசை ரொம்ப வெட்கப் படுதுங்க

இரண்டாமவர் : ஏங்க?

முதலாமவர் : அதுக்குத்தான் டிராயர் இல்லையே!

— கரு. ஆறுமுகம்

ஒம் மனசிலே என்னதான்டி நெனச்சுக்கிட்டிருக்கே! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டுப் போயி ஒரு வாரம் ஆகப்போகுது. இன்னும் ஒரு முடிவும் சொல்லலைன்னு என்ன அர்த்தம்'' என்று உருவத்துக்கேற்ற ஆண் குரலில் பேசினள்.

''என் முடிவைத்தான் அப்போதே சொல்லிட்டேனே பெரியத்தா'' என்றபடி சுவரில் சாய்ந்து கொண்டாள்.

''என்ன முடிவு? மாப்பிள்ளை பிடிக்கலைன்னு சொல்றதுக்கா அந்தப் புள்ளையாண்டான் மதுரையில் இருந்து செலவழிச்சிக்கிட்டு இங்கே வந்து போகணும்'' படுத்தபடியே பேசினள் பெரியாத்தாள்.

''நானு வரச் சொன்னேன்''

''நல்லா இருக்குடி நீ பேசறது. அவனுக்கு என்ன கொறச்சல்ன்னு நீ பிடிக்கலைங்கிறே; பையன் கொஞ்சம் ஒடிசலா இருக்கான். இவ்வளவு தானே. நாளைக்கு நீ வாய்க்கு ருசியா சமைச்சுப் போட்டீன்னு யானைக் குட்டியாட்டம் ஊதிட்டுப் போருன். இதுக்காக வேண்டாம்ன்னு சொல்லலாமாடி''.

''அது மட்டுமா, நல்ல கறுப்பு வேறே''

''அடி எழவே', ஏண்டி அவனைக் கறுப்புன்னு சொல்றியே நீ என்னடி!''

''நான் ஒண்ணும் அவ்வளவு கறுப்பு இல்லை!''

''உனக்கு அவன் கொஞ்சம் நிறம் மட்டம்; அவ்வளவுதானே! உங்க பெரியப்பச்சி இருக்காகளே அவுக அந்தக் காலத்திலே அட்டைக் கரியா, பிள்ளையாரைப் போல உருண்டு திரண்டு குட்டையா கட்டையா இருப்பாக. அவுகளைத்தான் நான் கட்டிக்கினேன். இத்தனைக்கும் நான் உன்னைவிடச் சிவப்புடி. எனக்கு இப்ப என்ன கொறச்சல்; அழகழகா ஒரு ஆம்புளைப்புள்ளை. சிங்கக் குட்டியும் தங்க கட்டியுமா பேரன் பேத்திகள்''.

அப்போதுதான் காபி கலந்து எடுத்து வரும் தாயைப் பார்க்கிருள். தாயுடன் பேசி நாலு நாளாகிறது. அவள் பார்த்த பையனை இவள் வேண்டாமென்ருளாம். அந்தக் கோபம். அதுவும் ஒரு பெண் பையனைப் பிடிக்கவில்லை என்று சொல்லி உதறலாமா? 'படிச்ச திமிரு பேசுது' என்று பொறிந்து தள்ளிவிட்டு, அவளிடம் மவுன விரதம் இருக்கிருள்.

''என்னடி நான் பேசிக்கினே இருக்கேன். நீ வாயை மூடிக்கிட்டு இருந்தால் எப்படி'' என்று பெரியாத்தாள் அவளது சிந்தனையோட்டத்தை வழி மறிக்கிருள்.

''நான் சொல்றதுக்கு என்ன இருக்கு. நீங்கதான் பேசுறீங்களே!''

''நீ சமத்தா நடந்துக்கிட்டால், நான் பேசுறதுக்கு ஒண்ணுமே இல்லை, நீ யோசிச்சுப் பாரு.

ஒருவர் : இவ்வளவு பெரிய வியாதியிலேயிருந்து எப்படி சார் தப்பிப் பிழைச்சீங்க?

மற்றவர்: நம்ம டாக்டர் பத்து நாளா ஊரிலே இல்லை... அதான்.

— வி. ஆர். சின்ன அருணசலம், தேவகோட்டை

இதைப் போல ஒரு இடம் இனிமே கிடைக்காது. இதுக்கு நீ ஒத்துக் கிட்டால், நாத்தனூர், கொழுந்த னூர், மாமியார்ன்னு எந்தப் பிக் குப் பிடுங்கலுமே இல்லே. மாம னூர் மட்டும்தான். அவுக கண்ட னூர் வீட்டைப் பார்த்துக்கிட்டு இருக்காக! கலியாணம் ஆச்சுன்னு நீயும் உன் ஆமக்கனும் மதுரை யில் தனி வீடு புடிச்சு வம்பு தும்பு இல்லாமல் இருக்கலாம். தொகை பகையும் ஒண்ணும் அதிகமாக் கேட்கலே''.

''அந்தப் பையன் குடும்பம் இருக்கே, பேனு தேனு வீடுன்னு பேரு. மனுசன் வீடு. கண்டனூ ரில் அந்தப் பையனுக்கு ஐயா தேனப்ப செட்டியார் பேரைச் சொன்னு எட்டுக் கண்ணும் விட் டெரியும். அவ்வளவு செல்வாக்கா இருந்தவுக; பையன் அப்பத்தா வுக்கு கொண்டை விளக்கு மீனி ஆச்சின்னு பேரு. கொண்டைக் குள்ளே பாட்டரி கட்டையை வைச்சு, மேலே சின்ன பல்பை எரியவுட்டுக்கிட்டு நடப்பா!''

''பையனுக்கு அப்பச்சி பெரிச்சி யப்ப செட்டியார் தலே எடுத்திட் டுத்தான் அந்த மார்க்கா இறக்க மாப் போச்சு! அதுக்கு அவுக என்ன செய்வாக! பர்மா கெட்டுப் போச்சு! அதனாலே தான் இன் னேக்கு நம்மளேப் போல எதவா உள்ளவுக கல்யாணம் காட்சின்னு அவுக வீட்டு வாசலே மிதிக்க முடியுது''

படுத்திருந்தபடி இவ்வளவு கதையையும் பேசிய பெரியாத் தாள் எழுந்து உட்கார்ந்து தங் கச்சி கொடுத்த காபியை ஆத்தி ஆத்திக் குடித்தபோது உமையாள் தலேயைக் குனிந்தபடி நழுவி, முகப்பு ஆலு வீட்டுக்கு வந்து மேசையில் தலே கவிழ்ந்தபடி உட்காருகிறுள்.

''இந்தாப்பாருடி, என் பேச் சுக்கு பதில் சொல்லாமெ, இந்தப் பொண்ணு எந்திருச்சு ஓடிருச்சு'' என்று அவள் தாயிடம் பெரியாத் தாள் சொல்வது அவள் காதில் விழுகிறது.

அதைத் தொடர்ந்து தன்னேப் பெண் பார்க்க வந்தவனே சிரமப் பட்டு மனசுக்குள் கொண்டுவரு கிறுள். 'பள்ளிக்கூடத்துப் பைய னேப் போல வயசுக்குப் பொருந் தாத சின்ன உருவம்; சாப்பாட் டுக்கு இல்லாதவன் போல முகம் எல்லாம் ஒட்டிப் போய், காய்ந்து கன்னத்து எலும்பு தெரிய...அடுப் புக்கரிக்கும் கேவலமான கறுப்பில் ...' அதுக்குமேல் அவனே நினேக்க வும் விரும்பாமல் கற்பனேக் கண வனே நினேவுக்குக் கொண்டு வரு கிறுள்.

உயரமாய், அதற்கேற்ற பரும னய், எலுமிச்சை நிறத்தில் உள்ளே ஓடும் நரம்புகள் வெளித் தெரியும் சிவப்பில் நெற்றியில் விழும் சுருள் தலேமுடியுடன்...

இப்போது அந்த உருவமும் மெல்ல மறைய அவள் மனக்கண் முன் அவள் பார்த்த சினிமாக் கதாநாயகர்கள் வலம் வருகிறுர் கள்.

'ஹார்லிக்ஸ்', 'விக்ஸ்' 'பைவ் ஸ்டார்' விளம்பரங்களில் பார்த்த மாடலிங் இளேஞர்கள்!

எல்லோரும் 'கியூ'வில் வந்து, அவளேப் பார்த்து 'அந்தக் கருப்ப னின் மனேவியா', 'அந்த நோஞ் சானின் மனேவியா' என்று கை கொட்டிக் கேலி பேசி...

யாரோ முதுகைத் தடவிக் கொ டுப்பதைப் போல உணர்ந்து சிந்தனே கலேந்து திடுக்கிட்டு நிமிர்கிறுள்.

அவளது தந்தைதான் வங்கியில் இருந்து வேலே முடிந்து வந்து இருக்கிறுர்.

''அப்பச்சி''

''என்னுத்தா''

''என் விருப்பத்துக்கு எதிரா எதுவும் நடக்காதுன்னு சொன்னீங்களே''

''ஆமா, இப்போ அதுக்கு என்ன?''

''இப்ப நடக்கிறதைப் பார்த்தா, ஒத்துக் கொள்ளச் செய்யாமெ என்னே விடமாட்டீங்க போல இருக்கே!''

''அப்படி இல்லேயாத்தா. உனக்கு நல்லது எது, கெட்டது எதுன்னு எடுத்துச்சொல்லத்தான் பெரியத்தா வந்திருக்காக!''

''அவங்க எதை நல்லதுன்னு நெனேக்கிருங்களோ, அதை நான் நல்லதா நினேக்கலே. எனக்கு நாத்தனுர், கொழுந்தனுரை விட, ஆம்பிளேயான்தான் முக்கியம். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கப் பச்சி. அந்தப் பையன் எப்படி எனக்குப் பொருத்தமா இருக்க முடியும். கொஞ்சமாச்சும் பெர்சனுலிட்டியா இருக்க வேண்டாமா?''

அவள் கண்களில் கண்ணீர் கரைகட்டி நின்றது.

அதைப் பார்ப்பதற்கு மனமில்லாமல், பாங்க் சீப் காஷியர் வள்ளியப்ப செட்டியார் தலேயைக் குனிந்து கொண்டார். அவருக்குப் பதில் பேச முடியாத நிலேமை!

பெண்ணின் மனம் நொந்து போவதை நினேத்து அவளே வற்புறுத்தவும் முடியவில்லே. வாங்கும் நாலு இலக்கச் சம்பளத்தில் ஐந்து இலக்கத்தில் சீதனம் கொடுக்கவும் முடியவில்லே. ஒரு பெண்ணுக்கே கொடுத்து விட்டால், எஞ்சிநிற்கும் நாலு பெண்களே எங்கே கொண்டுபோய்த் தள்ளுவது?

''உமயா, கல்யாணம் இருக்கே அது ரொம்பப் பெரிய விஷயமம்மா'' என்று தொடங்கி, மகளின் முகம் பார்த்து மனம் சங்கடப்பட்டு, பிறகு அவளது கூந்தலே லேசாகக் கோதியபடி தொடர்கிருர்: ''அழகைப் பார்த்தால் படிப்பு; படிப்பு, அழகு எல்லாம் பார்த்தா குடும்பம்; இதில் எல்லாமே தெகஞ்சு வந்தா, சீதனம் இருக்கே! அது அஞ்சு பொண்ணு பெத்தவனுலே கொடுக்க முடியாதாத்தா! அதனுலேதான் சொல்ரேம். நீ வீட்டு நிலேயை யோசிச்சு கொஞ்சம் விட்டுக்கொடுக்கணும்''

அவள் எதிர்பாராத கட்டம் இது. இவ்வளவு கனிந்து தந்தை அவளிடம் பேசியது கிடையாது. அந்தக் கனிவு அவள் இதயக்குலேகளே உலுக்கி, அவளே உருகச் செய்து விட்டது.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு ''சரியப்பச்சி; உங்க விருப்பம்'' என்கிருள் உமையாள்.

அவளது தந்தைக்கு சந்தோஷம். மனம் கொள்ளவில்லே; இவ்வளவு சுலபத்தில் சம்மதம் கிடைக்கும் என்று அவர் நினேக்கவில்லே.

''இந்தாப்பாரு அரைகுறையா பதில் சொல்லாம முழு மனசோட வாய் நிறைய முகம்மலர சரின்னு சொல்லணும்'' என்கிருர்.

அவளும் விஞடி கூடத் தாமதியாது முகம் மலர 'சரி அப்பச்சி' என்கிருள் அழுத்தமாக.

அவள் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் மவுனமாகப் பிறந்து, வழிந்தோடியதுகூட அந்தச் சம்மதத்துக்கு அடையாளம்தான் போலும்!

❖❖❖❖



அயோத்தி சென்று வந்தேன்

டாக்டர். ஆறு. அழகப்பன்

நான் அண்மையில் 'பர்மா' தாய்லாந்துப் பயணங்களை முடித்துக் கொண்டு கல்கத்தாவிற்கு வந்தேன். வந்த வேளையில் கவிஞர் காசு. மணியம் அவர்கள், ''காசிக்கும் சென்று வரலாமே'' என்று கூறினார்கள். நான் வேடிக்கையாக, ''கருமங்களைத் தொலைப்பதற்காகத்தான் காசிக்குச் செல்வார்கள். தொலைக்கக்கூடிய கருமம் எதுவும் நான் செய்யவில்லை. அதோடு இந்த வயதிலேயே அங்குச் சென்று வர வேண்டுமா'' என்று வேடிக்கையாகக் கேட்டேன். வேடிக்கைப் பேச்சு ஒருபுறமிருக்க, காசிக்குப் போக வேண்டும் என்ற உந்துதல் மட்டுமில்லை; காசியிலிருந்து அப்படியே இராமர் அவதரித்த அயோத்திக்கும் சென்று வரவேண்டும் என்ற ஆர்வமும் பிடர் பிடித்து உந்தியது.

காசி வினைதீர்த்தான்செட்டியார் உதவியோடு காசியைத் தரிசித்து விட்டு அயோத்தியை அடைந்து அங்கேயுள்ள நம்முடைய நகர விடுதிக்கு வந்து சேர்ந்தேன்.

அயோத்திக்குப் பெருமளவுக்கு நகரத்தார்கள் வந்துபோவதில்லை என்பதால் அயோத்தி நகர விடுதி களையிழந்து கிடந்தது.

அச் சத்திரம் முழுவதும் நான் சுற்றி வந்தேன். நுழைவு வாயிலுக்கு அடுத்து பொருத்தப்பட்டுள்ள கல்வெட்டைப் பார்த்தேன். அக் கல்வெட்டில் அச் சத்திரம் 1883ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் தேதியன்று கட்டப்பட்டதாக ஒரு குறிப்பு இருந்தது. தமிழில் சுபானு வருஷம் ஆவணி மாதம் 18ஆம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் நெஞ்சில் பதியும் ஒரு வாசகம் இருந்தது.

''பாண்டி நாட்டைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் அயோத்தியாபுரியில் ஸ்ரீ ராமபிரான் பிரதிஸ்டையும் அன்னதானச் சத்திர ஸ்தாபனமும் செய்யப்பெற்று நடந்து வருகிறது'' என்பதே அந்த வாசகம்.

வரும் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் தேதியுடன் அச் சத்திரம் கட்டப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவேறி நூற்றாண்டு விழா நடைபெற வேண்டும் என்பதை அந்தக் குறிப்பு உணர்த்துகிறது. இத்தரும ஸ்தாபனங்களை மேற்பார்வை செய்து வரும் குழுவினருக்கு இச் செய்தி தெரிந்திருக்கக் கூடும். இப்பொழுது இத் தரும ஸ்தாபனங்களைத் தமிழகத்திலிருந்து மேற்பார்வை செய்துவரும்

''வேட்டி இவ்வளவு அழுக்கா இருக்கே, அடுத்த பக்கம் திருப்பிக் கட்டக் கூடாதா?''

''கட்டலாம். ஆனால் வேட்டிக்கு மூன்றும் பக்கம் இல்லையே!''

— சொ. விஸ்வநாதன், ஆவினிப்பட்டி

ராஜா விடும் கூட்டாளிகளும்

''என் தந்தை சோமசுந்தரம் செட்டியார் இலங்கையில் பெரிய ராஜா அண்ணுமலை செட்டியாரிடம் ஏஜண்டாகப் பணி புரிந்தார்கள். ஒரு சமயம் பெரிய ராஜா இலங்கைக்கு வந்தபோது முதலாளியாயிற்றே என்ற கருத்தில் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு பணிவாக நின்ருர்கள்.

உடனே பெரிய ராஜா என் தந்தையின் இடுப்புத் துண்டை அவிழ்த்து என் தந்தையின் கழுத்தில் போட்டுவிட்டு ''செட்டிநாட்டுக்கு நான் ராஜாவாக இருக்கலாம்; ஆனுல் சிலோனுக்கு நீங்கதான் ராஜா. இந்த நிறுவனத்தின் கௌரவம், உங்களுடைய கௌரவத்தில்தான் அடங்கி இருக்கிறது. நான் இன்று வந்து நாளை போய்விடுவேன். நீங்கள் கௌரவமாகக் காட்சியளித்தால் தான் இந்த நிறுவனம் மாற்ருர் கண்ணுக்கு மேன்மையாகத் தெரியும்'' என்று சொன்னுர்கள்.

தங்களிடம் ஏஜண்டாகப் பணிபுரிபவர்களையும் தங்களுக்குச் சமமாகப் பாவித்து நடத்துவதில் செட்டிநாட்டு அரச குடும்பத்திற்கு இணையாக வேருெரு குடும்பத்தைச் சொல்ல முடியாது''

(கோவை நகரத்தார் சங்கப் பாராட்டு விழாவில் ஒக்கூர் இராமநாதன் செட்டியார் ஆற்றிய நன்றியுரையில்)

அறங்காவலர்கள் காசி நாட்டுக் கோட்டைச் சத்திரத்தின் நூற்ருண்டு விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடினுர்கள். அதுபோல பழுதடைந்து வரும் அயோத்தி நகர விடுதியை நன்முறையில் அவ்வறங்காவலர்கள் குழு புதுப்பிக்க வேண்டும். புதிய நவீன வசதிகளை இச் சத்திரந்தில் உருவாக்க வேண்டும். இச் சத்திரத்தில் குடியிருந்து வரும் சிலரை அப்புறப்படுத்த வேண்டும். இன்னபிற நற்செயல்களை இப்பொழுதே அவர்கள் முதற்கட்டமாகத் தொடங்க வேண்டும்.

காசிக்கு வரும் நகரத்தார்களும் பிற மக்களும் அயோத்திக்கு அதிகமாகச் செல்வதில்லை. மற்றைய திருத்தலங்களுக்கு அதிகமாகச் செல்கிருர்கள். அச் சத்திரத்திலுள்ள புத்தகங்களில் மகமை எழுதும் குறிப்பை நான் பார்த்தபொழுது பல மாதங்கள் இடைவெளிக்குப் பிறகு சிலர் வந்து செல்வதாகத் தெரிகிறது. பெருமைக்குப் புகழ்பெற்ற நகரத்தார்கள் காசிக்குச் செல்லுகின்றபொழுது, அயோத்திக்குச் செல்வதனைக் கட்டாயமாகக் கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை உள்ளது. அயோத்தி நகரம் முழுவதும் கால் வலிக்க நடந்தேன். அதன் அழகைப் பருகி மகிழ்ந்தேன். இராமன் கோயிலைத் தவிர இங்கு வேறு எந்தக் கோயிலும் இல்லை. 3500 இராமர் கோயில்கள் இருப்பதாக என்னுடன் வந்தவர் கூறினுர். இராம பஜனை இரவு பகலாக அங்கே ஒலித்துக் கொண்டு இருக்கிறது. ஒருவரை ஒருவர் பார்க்கின்ற பொழுது ''ஹலோ'' என்பதற்குப் பதிலாக ''ராம், ராம்'' என்று தான் சொல்கிருர்கள். தொலை

பேசியில் ஒருவர் பேசுகின்ற பொழுது ''ஹலோ'' என்று சொல்வதற்குப் பதிலாக ''ராம், ராம்'' என்றுதான் சொல்லுகிருர். இராம கீதத்தைத் தவிர வேறு கீதங்கள் கேட்க முடியவில்லை. புலால் உண்ணுமை, மது அருந்தாமை முதலிய பழக்கங்கள் கட்டாயமாக கடைப்பிடிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட அப்புண்ணிய பூமியில் நகரத்தார் சத்திரத்தில் உள்ள இராமன் திருவுருவச் சிலையைக் காணும் பேறு கிட்டியது. ஆறு அடி உயரத்திற்கு அற்புதமான விக்கிரகத்தை அங்கே கண்டேன். ராமனின் தோள் அளவிற்கு அவரது வாழ்க்கைத் துணை நலமாகிய தோகை சீதை விளங்குகின்ருள். அவர்கள் வாழ்வில் நிழலென வாழ்ந்த லட்சுமணனின் திருமேனி ஐந்து அடி உயரத்தில் நின்றுகொண்டு இருக்கிறது. உள்ளத்தால் உயர்ந்த ஹனுமானின் திருமேனி உணர்வுகளுக்கு விருந்தாக இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு அயோத்தி மாநகரத்தில், பஞ்சலோகத்தால் இவ்வளவு அற்புதமான சிலைகளை உருவாக்கிய நாட்டுக்கோட்டை நகரத்தாரை நினைத்துப் பார்க்கின்ற பொழுது, அவர்கள் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு நிலையான தொண்டு செய்துள்ளது நன்கு விளங்குகிறது. வேலகுடிப் பட்டயத்தில் பொதுவாக நகரத்தாருடைய வம்சம் சிவ வழிபாட்டிற்கு உரியது என்று கூறுவார்கள். எனவே, இந்த வைணவ வழிபாடு அதிசயமானது. இருப்பினும் நகரத்தார்கள் இன்றைக்குப் பெருமாள் கோயில்கள், கட்டடங்கள் ஆகியவைகளைப் பராமரித்தும் வருகின்றதைக் காண்கின்ருேம். ஆனல் நூறு ஆண்டுகளுக்கு முன்பே அயோத்தியா இராமனுக்கு நகரத்தார் சத்திரத்தில் சிறு கோயிலையும் படிமங்களையும் உருவாக்கியிருக்கிருர்கள் என்பதனை எண்ணும்பொழுது நகரத்தார்களுடைய சமயப் பொதுமை வெளிப்படுகிறது.


நண்பர்: என்ன நேற்று உங்க கச்சேரிக்கு ரெம்பக் கூட்டம் வந்ததாமே! எங்கே நடந்தது?

பாகவதர்: ரேஷன் கடை எதிரில்!

— வி. ஆர். சின்ன அருணுசலம்,
தேவகோட்டை.

பிள்ளையார் பட்டியில் தமிழில் வழிபாடு

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலில் 22-8-82 அன்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ் அர்ச்சனையைத் தொடங்கி வைத்தார்கள். இதுபோல் மற்ற நகரக் கோவில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டுமென பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலின் அறங்காவலர்களில் ஒருவரான திரு. நா. அருணுசலன் நகரத்தாரைக் கேட்டுக்கொண்டார்.



உங்கள் குரல்...

மகிழ்ச்சியும் பாராட்டும்

"நகரத்தார் குரல்" அக்டோபர் இதழில் கேள்வி-பதில் பகுதி தொடங்கவிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

'இதனை இதனால் இவன்
முடிப்பான் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்ற குறள் நெறிக்கேற்ப வாசகர்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்க பழ. கருப்பையா அவர்களைத் தேர்ந்தெடுத்து ஒப்புக் கொள்ளவைத்திருப்பது பாராட்டப்பட வேண்டிய செயல். தங்களின் நற்பணி தொடரட்டும்.

— குமு. கரு. சுந்தரம்,
குருவிக்கொண்டான்பட்டி.

அஞ்சலிக்கு நன்றி

தாங்கள் எங்கள் ஐயா, கம்பன் அடிப்பொடி அவர்கட்கு நல்ல முறையில் அஞ்சலி செலுத்திச் சிறப்பித்திருக்கிறீர்கள். மிக்க நன்றி.

— கம்பராமன், மதுரை.

அரிய செய்திகள்

கம்பன் அடிப்பொடி அவர்களைப் பற்றிய அரிய செய்திகளையும் புகைப் படங்களையும் வெளியிட்டு தக்க முறையில் அஞ்சலி செலுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. காரைதந்த கற்பகம் பாடல் மிகச் சிறப்பாயுள்ளது.

— க. ரேவதி, காரைக்குடி

நெஞ்சத்தைத் தொட்ட புகைப் படங்கள்

தமிழுக்காகத் தொண்டாற்றி தமிழன் மொழிகாக்கத் தன் வாழ்நாளில் இறுதி மூச்சு வரை சட்டைகூட அணியாமல் அயராது உழைத்த மாமேதை கம்பன் அடிப்பொடி அவர்களுக்குத் தாங்கள் தந்துள்ள அஞ்சலி மன நிறைவைத் தந்ததோடு அவர்களின் கடந்த காலத்தை புகைப் படங்கள் மூலம் நினைவுகூர்ந்த விதம் நெஞ்சைத் தொட்டது.

— இராம. முத்துக்கருப்பன்,
சங்கராபுரம்.

சிறப்பான தலையங்கம்

செப்டம்பர் இதழ் தலையங்கம் உள்ளது உள்ளபடி ரத்தினச் சுருக்கமாக மிகச் சிறப்பாக உள்ளது.

— ராம. நா. கோவிந்தன்
செட்டியார், மதுரை.

எழுத்தாளர் : எனது கதைகளைப் பற்றி ஒருவன் ரொம்ப மோசமாகப் பேசிவிட்டால் அன்று முழுவதும் நான் சாப்பிடுவதேயில்லை.

நண்பர்: அப்படியானால் நீங்கள் தினசரி பட்டினி கிடந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளப் போகின்றீர்கள் !

— வி. ஆர். சின்ன அருணாசலம்,
தேவகோட்டை.



நம்ம கையிலே என்ன இருக்கு ?
ஆச்சி சொன்னாச் சரிதான் !!

நம்முடைய ஆச்சிகள் சீமைச் சமர்த்திகள்! அவர்கள் போட்ட முடிச்சுக்களை அவர்கள்தாமே அவிழ்க்க முடியும்!

பிள்ளை வாயில் என்ன வைத்திருக்கிறது என்று தெரியாத போது அதைத் தாய் தன் விரலை விட்டுத் தோண்டிக் கக்க வைப்பது போல, ஆச்சிமார்களின் உள்ளக்கிடக்கையை வெளிக் கொணர நான் பின்னிப் பின்னிக் கேள்விகள் தொடுத்திருக்கிறேன் அவ்வளவுதான்!

பழ. கருப்பையா

30. 9. '82



வசந்தி ஆச்சி

(ஆத்தங்குடியில் பிறந்து காரைக்குடியில் வாழ்க்கைப்பட்டவர்; செட்டியார் பெயர் ஆறு. கருப்பையா; எவர்சில்வர்க் கடை; மாமனூர் ஆறுமுகம் செட்டியார், மதுரை வங்கியின் சென்னை மத்திய அலுவலகத்தில் அதிகாரி)

''நகரத்தார் சமூகம் முன்னேற எது தடை?''

''சீதனம், மாமியார் சாமான் இதெல்லாம்தான் தடை. அதிலே சீதனம் என்பது பொண்ணுக்குக் குடுக்கிறது; அது, பேரண்ட்ஸ் அவங்கவங்க இஷ்டப்பட்டுக் குடுக்கிறது! ஆனா மாமியார் வாங்கிக்கிறது நெசஸ்ஸரி இல்லேன்னு நினைக்கிறேன். மாமியார் சாமான் கொடுக்க வேண்டியிருக்கிறதனாலேதான் நிறைய கேர்ள்ஸ் அன்மாரீடா இருக்காங்க!''

''மாமியார் சாமான் வாங்கி நாங்க என்ன மிச்சமா புடிக்கிறோம்; கண்டாங்கி பட்டு வாங்கவும் சாப்பாடு போடவுமே சரியா இருக்கேங்கிருகளே!''

''அதுசரிதான்! மிச்சம் புடிக்கவும் கல்யாணம் பண்ணுவாக போலேயிருக்கு! பையனுக்கு லைப் குடுக்கிறதுக்காகத்தானே கல்யாணம்! அப்படிப் பார்த்தா பொண்ணு வீட்டுக்காரங்க மாப்பிள்ளை சாமான் வைக்கிருகளே அது மாதிரி நினைச்சுப் பொண்ணுக்குக் கண்டாங்கி பட்டு மாமியார் வீட்டிலே வாங்கி வைக்க வேண்டியதுதான்!''

''இதை எப்படி ஒழிப்பது?''

''பையனைப் பெத்தவங்கள்ளெல்லாம் நாங்க வாங்கலேன்னு முடிவு பண்ணோனும்! If they come forward, then they can do it. பொண்ணைப் பெத்தவங்க எவ்வளவு வைராக்கியமா இருந்தாலும் அது நடக்காது! ஏன்னா அவுங்க பொண்ணை வச்சிருக்கவுங்க! கொடுத்தால்தான் பொண்ணை வீட்டை விட்டு அனுப்ப முடியும்!''

''ஆம்பிளைப்புள்ளை வச்சிருக்கிறவுக ஒத்துவர மாட்டேங்கிருக! மாமியார்சாமான் தந்தால்தான் செஞ்சுக்குவோமிங்கிருகன்னு வைச்சுக்குங்க! இந்த நிலைமையிலே பொண்ணைப் பெத்தவுக எல்லாம் 'நாங்களும் பொண்ணு செய்யலை; போங்கன்னு' புறக்கணிப்புச்செய்தால் நிலைமை சீர்திருந்துமா?''

''கடைசியா அதுதான் வழி! அப்படித்தான் செய்யோனும் போலேருக்கு!''

''தங்களை ஒத்த அல்லது தங்களை விட மேலான அந்தஸ்துள்ள வீடுகள் வேணுமின்னு நினைக்கிறதுனாலேதான் இந்தக் கொடுக்கல்-வாங்கல் ஒரு சுமையா ஆயிருது; ஆமக்கன் வங்கியிலே வேலை பார்க்கனுமின்னு பொண்ணும் நினைக்கிரு; பொண்ணுக்கு ஆத்தாளும் நினைக்கிரு! உடனே பையனைப் பெத்தவ இருக்கிற விரலைஎல்லாம் விரிச்சுக் காட்டிட்டு ஒரு பெரிய நகையும் வேணுமிங்கிரு! இது எல்லாரும் சிறந்ததையே விரும்பறதுனாலே வர்ற போட்டி! எல்லாரும் வங்கி மாப்பிள்ளையையே விரும்பிறதுனாலே அந்த மாப்பிள்ளைக்கு விலை கூடிப் போகுது! பெரியவுகளைத் திருத்தி இதைத் திருத்திறதுங்கிறது நடக்கிற காரியமில்லை; ஆக

வே மாப்பிள்ளைக்கு விலை குடுக்கிற தை ஒழிச்சுக் கட்டக் 'காதல் திரு மணத்தை' ஊக்குவிக்கலாமா? காதல் திருமணம் என்றால் அது செட்டிய வீட்டுக்குள்தான்''

"Love Marriage is not so good"

'ஏன் அது நல்லதில்லை''

"They are in their teens; they do not have the brain enough to decide whether it is good or bad; so parents alone can do well".

''சரி, சரி! நீங்க காதலுக்குப் பெரிய எதிரி போலேருக்கு! அப் பறம் நீங்க உங்க காலத்திலே இந்த மாமியார் சாமானெல்லாம் வாங்கமாட்டீகளா?''

'' நிச்சயமா வாங்க மாட் டோம்''

''இப்பத்தானே வாக்கப்பட்டு வந்திருக்கோம்; மகன் பொறந்து அவனுக்குச் சேயிற காலத்திலே நாம பேட்டி கொடுத்தது யாருக்கு ஞாபகம் இருக்கப் போகுதுங்கிற தெம்பா?''

''சே! சே! அப்படி யெல்லாம் இல்லே! அனுபவப்படுறம் இல்லே யா! அப்பறம் நாமும் அதையே செய்வோமா?''

''உங்க மாமியாரும் இந்தத் துயரத்தையெல்லாம் அனுபவிச்ச வுகதானே! அவுக மாறுதபோது நீங்க மட்டும் எப்படி மாறுவீக!''

''ஐயய்யோ! எங்க மாமியா ரைப் பத்தி அத்தை இத்தைக் கேட்டு வாயைக் கிளறி சிக்கலிலே மாட்டி விட்டிருதீக!''

''மாமியாருக்கு அவ்வளவு பய மா?''

''செட்டிய வீட்டிலே பயப் படாம இருக்க முடியுமா''

''அப்படீன்னு இன்னும் ஆமக் களை கைக்குள்ள போட்டுக்கத் தெரியலைன்னு தெரியுது''

''ஹ்ற..ஹ்ற..ஹஹ்ஹ...ஹி..!''

''சரி; எல்லாம் போகட்டும்; கடைசியா ஒரு கேள்வி! 'சாகக் கொடுத்த ஒரு இள வயது ஆச்சி மறுபடியும் கல்யாணம் பண்ணிக் கினு என்ன?''

''ஏன் பண்ணிக்கக் கூடாது? They both have the same conditions; ஆம்பிளை பண்ணிக்க லாம்; பொம்பிளை பண்ணிக்கக் கூடாதா? விதவையாய் இருந்து எப்பவும் கஷ்டப்பட்டுக்கிட்டே இருக்கணுமா? ஆம்பிளை மறு கல்யாணம் பண்ணிக்கலைன்னு லும் அதுனாலே ஒன்னுமில்லே; ஆம்பிளைக்கு 'ஈஸி-கோயிங் லைப்' ஆனால் ஒரு கேர்ள் விதைவை யின்னு She has to bear a lot of troubles.

''அதனாலே இன்னொரு கல்யா ணம் பண்ணிக்கினு விதவைக்குப் பாதுகாப்புக் கிடைக்குமிங்கிறது உங்க கருத்தா?

'' செக்யூரிட்டி மட்டுமில்லே; She can go in the society with a head held high. இல்லைன்னு சமூகம் அவளை எப்பவுமே ஒதுக்கீ ருதே; சாகக் கொடுத்தவள்னு சொல்லி தள்ளி வச்சிருதே!''

''சாகக் கொடுத்தவுக சமூகத் தால் பொது இடங்களில் அங்கீ கரிக்கப்படுவதில்லை என்பதினாலே நீங்க இரக்கம் காட்டுறீங்களா?''

''ரிகக்னேஸ் பண்ணலைங்கிறது ஒரு வருத்தம்; அதோட ஒரு வித

வை ஏன் தன் வாழ்க்கையை வீணுக்கிக்கணும்?''

''சரி; சாகக் கொடுத்தவ மறு கல்யாணம் பண்ணிக்கலாமின்னு அனுமதிச்சர்ரேும்! அப்ப 'கற்பு' அடிபட்டுப் போகுமே!

''ஒருத்தனேட வாழுகிற வரை தானே கற்பு. ஆமக்கன் சாக விட்டி மாறினுலும் சாகாமலே மாறினுலும் 'கை' இரண்டாவது இரண்டாவதுதானே! அப்ப கற்பு என்ன ஆகும்?

''கற்பு என்னமோ ஆயிட்டுப் போகுது! அது ஆண்கள் தங்கள் சௌகரியத்திற்காகவும், ஆதிக் கத்திற்காகவும் கண்டுபிடித்ததுதா னெங்கிறிகளா?''

''ம்...ம்...ஈம்...ஈங்...''

★

முத்தம்மாள் ஆச்சி

(அரிமளத்தில் பிறந்து உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டவர்கள்; செட்டியார் பெயர் - செ. செல்லப்பன்; மீனுட்சி புத்தக நிலைய உரிமையாளர்.)

''உங்க காலத்துக்கும் உங்க மகமிண்டிகள் காலத்துக்கும் என்ன வேறுபாடு?''

''எங்க காலத்திலேயெல்லாம் இப்படிச் சுதந்திரமா இருக்க முடியாது. முப்பத்தோரு ரூபாயும் நூத்தியொரு முறுக்கு வடையுமின்னு அதை எண்ணிக் கொண்டாந்தாத்தாண்டி இருக்கலாமின்னு எங்க மாமியா சொன்ன காலம் அது. குழம்பு வெஞ்சனம் வைக்கோனுமின்னுக் கூட மாமியாளைக் கேட்டுத்தான் வைக்கோனும்! பெரியாச்சி அத்தையித்தைச் சொல்லுதுன்னு எங்க செட்டியாரிட்டச் சொன்னுல், 'ம்,... அதெல்லாம் எங்கிட்டச் சொல்லாதே; உம்பாடு நாத்தாபாடுன்னு' சொல்லிட்டுப் போயிருவாக! இந்தக் காலத்திலே என் சின்னமகன் 'என் பெண்டாட்டியை ஏன் அப்படிச் சொன்னு'யின்னு கேக்கிருன்''.

''கலியாணம் சேஞ்ச புதிசிலே கொஞ்ச நாளைக்குப் பையன்கள் பொண்டாட்டிக்குத்தான் ஏவங் கேட்பாங்க!''

''எங்க செட்டியார் அப்படிக் கேக்கலியே!''

(ஒரே சிரிப்பு! செல்லப்ப செட்டியாரும் சேர்ந்து சிரிக்கிருர்கள்)

''நீங்க ஆங்கிலம் படிக்காத பழைய காலத்துப் பொம்பிளைகள் என்ருலும் லயன்ஸ் கிளப்பிலே சேர்ந்திருக்கிய! தோரணையான பல வகையான மக்களோட பழகுறீய! ஒரு புதிய பார்வை உங்களுக்கு இருக்கும்!''

''மற்ற ஆளுகள்ளெல்லாம் கலியாணம் காட்சின்னு சந்தோசப் படுருக! நம்மள்லே கல்யாணமின்னு எம்பிட்டுக் குடுத்தாலும் சம்பந்தியாள் பத்தலை பத்தலைன்னே சொல்லி வெறுக்க அடிச்சு கல்யாணத்தன்னைக்கு ஒரு சந்தோசமில்லாமப் போயிடுது! ஒரு கலியாணமின்னு சட்டியும் பொட்டியும் தேங்காயும் பழமும்.. அப்படியும் சம்பந்தியாள் குறை தான் சொல்ருு...! 'அடி நோத்தா இம்பிட்டுச் சின்னமா தேங்காய் எங்கே போயி வாங்கியாந்தாங்கிருள்'! நம்ம வீட்டுப் பொண்ணு



பழ. கருப்பையா

''முறைதலையை விடமாட்டேங்கிறீயளே! மாமியார் சாமானை விடமாட்டேங்கிறீயளே! வழக்கம் வழக்க மின்னு சொல்லி பழசையெல்லாம் விடமாட்டேங் கிறீயளே! அப்பத்தாள் காது வளர்த்தாள்! நீங்க காதா வளர்க்கிறீக? இது மாதிரி எல்லாத்திலேயும் மாற்றம் வந்தாத்தானே சமூகம் வளர்ச்சியடையும். ஓடுகிற நீர்தானே தூய்மையாக இருக்கும்! தேங்கிய நீர் கெட்டுப் போகுமே! காலத்திற்கேற்பச் சிந்தித்து மாற்றம் பெருத சமூகம் வளராமல் போய்விடுமே!

இந்தக் கல்யாணம் ஆகாத பொண்ணுகளை நினைச்சா வது மாத்திக்கப்படாதா?''



''ஆம்பிளை மறுகல்யாணம் பண்ணிக்கலாம்; பொம்பிளை மட்டும் கூடாதா? *They both have the same conditions.*''

காரைக்குடி
வசந்தி ஆச்சி



'' முறைதலையெல்லாம் இல்லாம பெண்ணைப் பிடிச்சுக் கையிலே கொடுத்து 'போயிட்டு வா ஆத்தா'ன்னு சொல்ற காலம் வரணும்''

அரிமளம்
முத்தம்மாள் ஆச்சி

''கலியாணம் ஆகாத பொண்ணுகளுக்கு வழியைக் காணோம்; இதிலே விதவைக்கு என்ன ரெண்டாங் கல்யாணம்?''



தேவகோட்டை
நாக. இந்திரா



''பந்தக் கால்லே வச்சுத் தாலியை வாங்கினதுக்கு அப்பறம் மறு தாலி கட்டுறது முறையில்லே''

பனையப்பட்டி
சானகி ஆச்சி



'' நம்மள்ளேதான் அரசு, அரசுன்னு மருகுகிறோம்; ஏன் பொம்பிளைப் பிள்ளை கொள்ளி வச்சா எரியாதா?''

கல்லல்
சந்திரா ஆச்சி



''மகள்தான் அன்னியம்; மக மிண்டி அன்னியமில்லை; மகமிண்டி இந்த வீட்டின் இன்ப துன்பத்தி லே பங்கேற்க வந்தவள்.''

கோனபட்டு
மீனாட்சி ஆச்சி

ஓவியமின்னு சம்பந்தியாள் சொல்ரு! தேங்காய் சின்னமா இருக்குன்னுதான் சொல்ரு! அதனலே மற்ற சாதிகள்ளே மாதிரி முறைதலையெல்லாம் இல்லாமல் பொண்ணைப் பிடிச்சுக் கையிலே கொடுத்துப் போயிட்டு வா! ஆத்தான்னு சொல்ருப்பிலே நம்மசாதியும் மாருனும்!

''நீங்க உங்க மகமிண்டியை எதுவும் வாங்காமல் கையைப் புடிச்சுத்தான் கூட்டியாந்தியளா?''

''நாங்களும் எல்லாரையும் போலத்தான் செஞ்சிருக்கோம்; புரட்சி எதுவும் செய்யலே! அதோடு என் மகன் அவன் பொண்டாட்டிக்குக் கண்டாங்கி பெரிய கண்டாங்கியா வாங்கோனுமிங்கிருன்; எல்லாம் பெண்டாட்டிக்கின்னு ஒசத்தியானதா இருக்கோனுமிங்கிருன்; அப்புறம் என்ன கையிலேயிருந்தா பண்ண முடியும்?''

''அப்படீன்னு உங்க மகன் தான் மாமியார் சாமான் வாங்கினதற்குக் காரணமிங்கிறியளா?''

(இந்த இடத்தில் செல்லப்ப செட்டியார் குறுக்கிட்டு) ''அவன் மாமியார் சாமான் வாங்கச் சொல்லலே. நம்ம வீட்டிலேயிருந்து தன் பெண்டாட்டிக்கு எல்லாம் ஒசத்தியா வாங்கிக் கொடுக்கச் சொல்ருன்!''

''சரி ஆச்சி! கடைசியா ஒரு கேள்வி! விதவைக்கு மறு கல்யாணம் பண்ணின என்ன?''

''...ம்! அதென்னமோ என் மனசுக்கு அது நல்லாப் படலே. இப்பவெல்லாம் எங்க பக்கத்திலே வெள்ளைச் சேலே கட்டாமல் கலர்ச் சேலேயே கட்டுருக! அது என்னன்னோ தொலேயுது! அதுகூடப் பரவாயில்லே! ஆனல் ஒருதரம் மணவறையிலே உக்காந்து தாலி கட்டிக்கினு அதை அறுத்தவ மறுதரம் மணவறையில உக்காந்து மறுதாலி கட்டிக்கிறது நல்லாவா இருக்கு?''

நாக. இந்திரா

(தேவகோட்டையில் பிறந்தவர்; இன்னும் மணமாகவில்லே; தகப்பஞர் நாகப்ப செட்டியார், மதுரை நகர விடுதியில் மேலாளராகப் பணிபுரிகிருர்கள்.)

''உங்களுக்குத் திருமணம் ஆயிருச்சா? உங்க தாயார் எங்கே இருக்காக?''

''ஆத்தா தம்பியோட சென்னையிலே இருக்காக! எனக்கும் என் தங்கச்சிக்கும் சேயோனும்! தம்பி சம்பாரிக்கிறது அவனுக்கே பத்தலே; அப்பச்சி பெரியவுக; அதனலே நான் அவுகளுக்கு சமைச்சுப் போட்டுக்கினு இங்கே துணையா இருக்கேன். எனக்கு இன்னம் கல்யாணம் ஆகலே! அப்பச்சி பாத்துக்கினுதான் இருக்காக! நாம ஒரு இடத்துக்கு சொல்லிவிட்டா இன்னெருத்த வந்து கூடுதலாக் கொடுக்கிறேன்னுன்னு சொன்னவுடனே தட்டிக்கினு போயிருது! நம்ம செட்டிய வீட்டிலே பொண்ணு முக்கியமில்லே; எவ்வளவு கொடுப்பாக என்பதுதான் முக்கியமாயிருக்கு!''

''அப்ப இதுக்கு என்ன பண்ணலாம்? இந்த நகரத்தார் சங்கங்கள் பணக்காரர்களுக்குப் பாராட்டு விழா நடத்திறதையே வேலேயா வச்சுக்காம இதைப்

மித்தியெல்லாம் கலந்து பேசி ''கட்டு'' ஏற்படுத்தலாமிங்கிறியளா?''

''அது கொண்டு வந்தா ரெம்ப நல்லதுதானே! எந்த ஒன்னுலேயும் பணக்கார எல்லாம் பண்ணிப்பிடுருக! வசதியில்லாதவுகளும் அது மாதிரி பண்ண நினைக்கிருக! அவுகளாலே முடியலே; அதனுலே பொண்ணுக வாழ்க்கை பாதிச்சிருது''.

''விதவைகள் மறு கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''அது வேண்டியதில்லே''

''ஏன்?''

''ஏற்கனவே நம்மளே பொண்ணுக நிறைய இருக்காங்க; மாப்பிள்ளேகள் குறைச்சல்; இந்த நிலேமையிலே விதவைகளுக்குக் கல்யாணம் பண்ணிக்கினு இருந்தால், கல்யாணம் ஆகாமலே இருக்கிற கன்னிப் பொண்ணுகளே என்ன செய்யறது!''

''ஒரே சமூகத்துக்குள்ளேதான் கல்யாணம் பண்ணனும் என்கிற நிலேயில் ஆண்-பெண் எண்ணிக்கை சமநிலேயில் இல்லாதபோது இயற்கையாக ஏற்படுகிற சிக்கல் இது; சரி...இந்த ஆம்பிளேக மட்டும் இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கினு அவளேக் கூட்டிக்கினு ராத்திரி ரெண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போருகளே!''

''பொண்டாட்டி இருக்கயிலே இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கினுத் தப்புத்தான்!''

''அப்படி உங்க தேவகோட்டை ஒன்னுலதான் நடக்கும்!''

''ஹஹ்ஹ—ஹஹ்ஹா...''

(மதுரை வங்கி தெற்கு மாசி வீதிக் கிளே மேலாளர் சிதம்பரம் செட்டியார் விழுந்து விழுந்து சிரிக்கிருர்; அவர் தேவகோட்டை)

சானகி ஆச்சி

(குழிபிறையில் பிறந்து பனேயபட்டியில் வாழ்க்கைப்பட்டவர்கள். செட்டியார் பெயர்— நடராசன் செட்டியார்; ஆற்காடு ஆலே உரிமையாளர்கள்; செட்டியார் மதுரை நகரத்தார் சங்கத்திற்குத் தலேவர்.)

''இந்தத் தீர்த்தம் குடிக்கிறது —விளேயாட்டுப் பெட்டி வேவு இதெல்லாம் எதுக்கு?''

''விளேயாட்டுப் பெட்டி வேவு எங்க பக்கம் எந்த நாள்லேயும் கிடையாது. உங்க காரைக்குடிப் பக்கம் எதையுமே சத்தே மிகையாப் பண்ணுவாக! தீர்த்தம் குடிக்கிறது வரவர எங்கபக்கம் அருகிப் போச்சு!''

''நாங்களெல்லாம் ஏட்டுப் பள்ளிக்கூடத்திலே படிச்சோம்; அப்பவெல்லாம்

'ஏடு கிழியாதா
எழுத்தாணி ஒடியாதா?'

அப்படின்னு பாடுவோம். அது மாதிரி சிரமப்படுற பொம்பிளேப் பிள்ளேகளெல்லாம்,

'முறைதலே ஒழியாதா
முறைநோட்டுக் கிழியாதா'

அப்படீன்னு மனம் நொந்து பாடுதுகளே!''

''முறை நோட்டுத் தேவையில்லே; முறையை மொத்தமாக் கொடுத்து மொத்தமா வாங்கிக்கிண்டிரலாம்!''

(எங்கள் பக்கம் ஒரே சிரிப்பு — கேள்வியின் அடிப்படையே தகர்ந்துபோச்சுங்கிறதுனுலே)

''முறையே எதுக்குன்னு நான் கேக்கிறேன்''

''முறையே இல்லாமப் பண்ணப் பெண்டுகள் ஒத்துக்க மாட்டாக! மேக்கொண்டு முறையினுலேயா செலவு கூடிப்போகுது? தீஞ்சாமான்லே செலவு தானப் படியா வருது!''

''சரி; தீஞ்சாமான் செலவு ஏன் தானப்படியா வருது? கூட்டத்தைக் கூட்டுரதுனுலேதானே! ஏன் இவ்வளவு கூட்டம் கூட்டோனும்?''

''யாரு நாங்களா கூட்டம் கூட்டுரோம்? ஆம்பிளேகதான் கூட்டுருக!''

(மீண்டும் ஒரே சிரிப்பு அலே; நடராசன் செட்டியாரும் சேர்ந்து சிரிக்கிருர்கள்; ஆச்சி லாவகமாகப் பழியைச் செட்டியார்கள் பக்கம் தள்ளிவிட்டு விட்டார்கள்.)

''சரி,...அப்பறம்,..பிள்ளேகள் எத்தனே பெறலாம்?''

''இரண்டொன்னு போதும்! அதுக்கு மேலே இந்தக் காலத்துக்குத் தேவையில்லே!''

''நீங்க அந்தக் காலத்திலேயே மூனுதானே பெத்திருக்கிய! ரெம்பக் கணக்காயிருந்திருக்கியளே!''

(ஆச்சி சிரிக்கிருர்கள்! இந்த வயதிலேயும் வெட்கம் கலந்த பூரிப்பு அவர்களின் முகத்தில் படர்கிறது. வெட்கத்திற்குக் காரணம் பழைய நினேவுகளாய் இருக்கலாம்; ஆத்தாள் வீட்டுக்கு ஆம்பிளேயானேக் கூட்டிக்கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே மறுவழிக்குப் போகும்போது பேசிக்கொண்டு போன பேச்சுக்கள் நினேவில் மோதியிருக்கலாம்!)

(பூரிப்புக்குக் காரணம்—இங்கிலீசுக் கொடி பறந்த காலத்திலே சுதந்திர இந்தியாவின் எதிர் காலத்திற்கேற்பத் திட்டமிட்ட தன்னுடைய சமர்த்தைக் குறித்ததாய் இருக்கலாம்.)

''சரி...அப்பறம்...உங்க மாமியா உங்களே நடத்தினதுக்கும் நீங்க உங்க மகமிண்டியை நடத்துறதுக்கும் வித்தியாசம் இருக்கா?''

''இருக்கு! அந்த நாளேயிலே ஒரே சண்டை சச்சரவா இருக்கும்! இந்தக் காலத்திலே அப்பிடியில்லே; எனக்கு ஒரே மகன்; அவனுக்கு என் அண்ணன் மகளேத்தான் சேஞ்சோம்''.

''நான் சொல்றேன் — நீங்க உங்க மகனுக்கு உங்க அண்ணன் மகளேக் கொள்ளாமல் நாத்தினுர் மகளேக் கொண்டிருந்தால் ஒரே சண்டையாய் இருந்துருக்குமிங்கிறேன்!''

(ஒரே சிரிப்பு; ஆச்சி ரசித்துச் சிரிக்கிருர்கள்; இதற்குப் பதிலெதுவும் சொல்லவில்லே)

''விதவைக்கு மறுகல்யாணம் பண்ணினு என்ன?''

''அது சரியில்லே; பந்தக்கால்லே வச்சுத் தாலியை வாங்கினதுக்கு அப்பறம் மறுதாலி கட்டறது முறையில்லே''

''சரி...தாலி கட்டிறதுனுலே தான் வாங்க வேண்டியதிருக்கு; தாலியே கட்டாமல் விட்டிட்டா...''

''அது என்னன்னு?''

''மாப்பிள்ளேக்குப் பொண்ணு மாலே போடற மாதிரி பெண்

ணுக்கு மாப்பிள்ளை மாலை மாத்திரம் போடறது; தாலி கட்டறதில்லை; தாலி கட்டாததினால் அதைப் பந்தக்கால்லே வச்சு வாங்க வேண்டிய தேவையுமில்லை; அப்படிச் செஞ்சா மறு கலியாணத்திற்கு நீங்க சொல்ற தடை அகன்று போகுமே!''

''அது என்னமோ எனக்குத் தெரியலே; ஆனால் சாகக் கொடுத்தவளுக்கு மறுகலியாணம் சேஞ்சா நம்ம பழைய வழக்கமெல்லாம் கெட்டுப் போகும்; சமூகம் விருத்தியுமாகாது.''

''சரி...இள வயதிலே சாகக் கொடுத்தவள் கண்டுங் காணுமேயும் சத்தே முன்னப்பின்னே இருக்க நேர்ந்திருது; இப்படி அவளை விட்டுவிடுவதை விட அவளை ஒருத்தன் கிட்டப் புடிச்சுக் கொடுக்கிறது நல்லதில்லையா?''

''அது எப்படி அவள் முன்னப் பின்னே இருக்கலாம்? கட்டுப்பாடாத்தான் இருக்கணும்.''

''பசிக்கு அடுத்தபடியா ஆணையும் பொண்ணையும் ஆட்டிவைக்கிற உணர்ச்சியை உபதேசத்தாலே கட்டுப்படுத்த முடியுமா?''

''அது என்னமோ நீங்க சொல்றது எனக்குச் சரியா மட்டுப் படலை; ஆனால் நம்ம சாதி சனத்துக்கு இந்த வழக்கம் நல்லதில்லை''.

சந்திரா ஆச்சி

(மதுரை வங்கி தெற்கு மாசி வீதிக் கிளையில் பணி புரிபவர்; தெக்கூரில் பிறந்து கல்லலில் வாழ்க்கைப்பட்டவர்; செட்டியார் பெயர் கிருட்டிணன்)

'' இப்பப் புதிய காலத்திலே உங்களைப் போல வேலைக்குப் போகிறவுகளுக்கு எளிதா மாப் பிள்ளை கிடைத்திருக்குமே! மாமியார் சாமான்-சீதனத் தொந்தரவு குறைச்சலா இருந்திருக்குமே! வங்கி மாப்பிள்ளைக்கு ஒரு மவுசு இருக்கிற மாதிரி வங்கிப் பொண்ணுக்கும் இருந்திருக்கணுமே! ''

'' இல்லையே; அப்படியிருந்தா எவ்வளவோ நல்லதா இருக்குமே! ஆம்பிளைப்புள்ளைகள் படிச்சிருந்தா அதுக்குத் தகுந்தாப்பிலே கேக்கிருங்க; பொம்பிளைப்புள்ளைகள் படிச்சிருந்தாலும் வேலைக்குப் போனாலும் அதுக்காகக் கொஞ்சம் கூட குறைச்சுக் கேக்கிறதில்லை. அதை அவுக கணக்கிலேயே எடுத்துக்கிறதில்லை. பொம்பிளை வேலைக்குப் போறதினாலே அவள் தன் குடும்பத்தை நடத்த வசதியா இருக்குங்கிறதைத் தவிர கல்யாணத்துக்கு அது உதவியா இல்லை.''

'' இந்தத் தீர்த்தம் குடிக்கிறது-விளையாட்டுப்பெட்டி வேவு இவையெல்லாம் தேவையா? ''

'' தேவையேயில்லை ''

'' நீங்க இதெல்லாம் நடத்தினீங்களா இல்லையா? ''

'' நடத்தினோம்; நடத்தாம எப்படி இருக்க முடியும்? இருக்க விடுவாகளா? ''

'' நீங்க உங்க மாமியாரிடம் — இதெல்லாம் பழைமையானது; தேவையில்லாதது என்று சொல்லி மறுத்திருக்க முடியாதா? ''

'' அதெல்லாம் முடியுமா ? அப்படியெல்லாம் மறுத்துப் பேசிட்டு எப்படிக் குடும்பத்துக்குள்ளே ஒத்து இருக்கிறது ? ''

'' ஆம்பிளையாளை வசப்படுத்திருக்கினு அவுக மூலமா மாமியாரை ஆட்டி வைக்க முடியாதா? ''

'' ஹ்ற...ஹ்ற...ஹஹ்ஹா. வசப்படுத்திக்கிறு நம்ம குடும்பத்துக்குளே நாம சொல்றது எடுபடலாமிங்கிறதைத் தவிர...... மாமியார் என்பது தனி ''

'' அப்படீன்ஞ, மாமியாருக்குக் கட்டுப்படாமே முடியாதுங்கிறீகளா ?

'' ஆமா; இல்லேன்ஞ நல்லா வைச்சுக்க மாட்டாக ! ''

'' மாமியா மகமிண்டியை வைச்சுக்கிறதுங்கிற காலம் போயிருச்சே; முந்தியெல்லாம் மாமியா 'வருசத்துப் பொதி' கொடுத்தாள்; ஆகவே அவளுக்குப் பயப்பட வேண்டியதிருந்துச்சு; இப்ப எதுக்காகப் பயப்படோனும் ''

'' பயப்படாம எப்படி இருக்க முடியும் ''

'' நான் என்ன சொல்றேன்ஞ- நீங்க உங்க ஆமக்கனேட வெளியூருக்கு வந்திட்டீக ! ஆகவே நாளாசரி வாழ்க்கையிலே மாமியார் பிடியிலேயிருந்து விடுபட்டிருக்கீங்க ! எல்லாத்துக்கும் மேலே நீங்களே வங்கியிலே வேலே பார்க்கிறதுனலே நீங்க யாரைச் சார்ந்தும் இல்லே; உங்க வாழ்க்கை பாதுகாப்பா இருக்கு! இப்படிப்பட்ட நிலேயிலே இருக்கிற நீங்களே உங்க மாமியாரிடம் '' தீர்த்தமெல்லாம் குடிக்கத் தேவையில்லே; விளேயாட்டுபெட்டி வேவெல்லாம் வேண்டாம்; நாத்தா வீடாலே பலகாரமெல்லாம் பண்ணிக் கொண்டாற முடியாது; நாத்தா வீடு என்னேப் படிக்க வச்சே எச்சுப் போஞக! அதன் பலனே உங்க குடும்பம்தான் அனுபவிக்கிது; அதோட விளேயாட்டுப் பெட்டி வேவு இறக்கலேன்ஞ என் மகன் விளேயாடப் போகமாட்டேன்னுருவாஞ' அப்படீன்னு கேட்டு இந்தப் பழைய சடங்குகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்ட முடியாதா? உங்களாலேயே முடியாதுன்ஞ சார்ந்தே வாழுகிற பெண்ணுலே எப்படி முடியும்? ''

'' எல்லாமே பரம்பரையா வர்றது; அதை எதிர்த்து நம்ம மட்டும் எப்படி ஒழிக்க முடியும்? எல்லாரோடையும் நம்மளும் ஒரு ஆளாப் போயிற வேண்டியது தான்! நம்ம காலம் வர்றபோது செய்யலாம் ''

'' உங்க காலம் வர்றபோதும் சமூகம் இப்படித்தானே இருக்கும் ''

'' அது எப்படி இருந்தாலும் வாங்கிக்கிறது நம்ம விருப்பம் தானே ! ''

'' உங்களுக்கு எத்தனே பிள்ளேகள்? ''

'' ரெண்டு ''

'' அரசா? பொண்ணு? ''

'' ரெண்டும் பொண்ணு ''

'' ஓ! அப்படியா! அப்படீன்ஞ சரிதான்! ஏன்ஞ நீங்க கொடுக்க வேண்டியவுக. சரி; போகட்டும்! குடும்பக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை உண்டா? ''

'' ஆமா! ரெண்டுபோதுமின்னு தான் எண்ணம் ''.

'' உங்களுக்கு அரசு இல்லேயே ! ''

''ஆமா; இல்லேதான். ஆனு ஆண் குழந்தைதான் வேணு மின்னு அடுத்தடுத்துப் பொண் ணுப் பொறந்திட்டா நம்மாலே அவ்வளவுக்கும் வகை பண்ண முடியாதே!''

''சரி; பெண்ணுப் பிறக் குதேன்னு பயந்து இடையிலேயே நிறுத்திட்டா அப்பறம் செத்தா யார் கொள்ளி வைக்கிறது?''

''ஏன்? பொம்பிளேப்புள்ளேயே வைக்கலாம்! வைக்கப்படாதா?''

''சரி; அப்படின்னு பொம்புளேப் பிள்ளேயே கொள்ளியை வைச் சிட்டுச் சொத்.தை எடுத்துக் கலாமிங்கிறிகளா?''

''தாராளமா''

''ரொம்பச் சரி; கொள்ளியும் வைங்க! சொத்தையும் எடுத்துக் குங்க! ஆனுல் வாக்கப்பட்ட அன்றைக்கே விலாசத்தையும் மாத்திக்கினு கோயிலேயும் மாத் திக்கினு வேறெ வீட்டுக்கு போயி ருறீகளே! உங்களுக்குச் சொத்தை விட்டிட்டுப் போன தகப்பன் பேர் இந்தக் கடல் சூழ்ந்த நிலவுலகத் திலே நிலேக்காமலேயே போயி ருமே!''

''அது என்னமோ! நம்மள்ளே தான் ஆம்பிளேப்பிள்ளே ஆம்பிளேப் பிள்ளேங்கிறேம்.''

''கடைசியா ஒன்னு! சாகக் கொடுத்த ஆச்சிகள் மறுகல் யாணம் பண்ணிக்கலாமா?''

''ஆம்பிளேகள் எப்படி மறு தாரம் பண்ணிக்கிருகளோ அப் படிப் பொம்பிளேகளும் மறு கல் யாணம் பண்ணிக்கலாம். ஆம்பிளே மாதிரித் தானே பொம்பிளேயும்; என்ன வித்தியாசம்? மற்ற சாதி கள்லே பண்ணிக்கலேயா!''

மீனுட்சி ஆச்சி

(கோனுபட்டில் பிறந்து உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டவர்கள். செட்டியார் பெயர்—முத்தழகப்பன்; நாகப்பா சைக்கிள் மார்ட்.)

''செட்டிய வீட்டிலே சீதனம் குடுக்கிறதுக்காவது ஒரு நாயம் இருக்கு; ஏதோ ஆமக்கன் வகை யில்லேயின்னுலோ செத்துப் போயிட்டாலோ அது அந்தப் பெண்ணுக்கு பாதுகாப்பா இருக்கு; ஆனு இந்த மாமியார் சாமான் வாங்குறது எந்த விதத் திலே நாயம்?''

''மாமியார் சாமான் தேவை யில்லேதான்; ஆனுல் இந்த முறை தலேயினுலேதான் செட்டிய வீடு ரெம்ப முடங்குது. இதைச் சொன்னு 'அடி...இவளுக்கு எல் லாம் முடிஞ்சு போச்சுன்னு பேசு ருடி'ன்னு சொல்லுவாக!

''வசதியுள்ளவுகளும் விரட்டி விரட்டி வாங்குருகளே!''

''பொதுவா நம்ம பொண்டு களுக்கு நான் மகனுக்கு இவ்வ ளவு வாங்கினேன்னு சொல்லிக் கிறது ஒரு பெருமை. குறைச்சு வாங்கிச் சேஞ்சா அடி...இவ மக னுக்குக் கலியாணம் வரலேன்னு சொல்லுவாகளேன்னு பயம்''

''இல்லாதவுகளுக்குக் கொடுக் கிறது பெருமை; இல்லாதவுகளேப் பிழிஞ்சு வாங்குறதிலே என்ன பெருமை; இது அறியாமை தானே!''

''ஆமா''

''சரி...இப்பவெல்லாம் நம்மள்ளே ஒன்னுரெண்டு பிள்ளைகளுக்கு மேலே பெர்றதில்லே; ஏற்கனவே நம்ம சனம் குறைச்சலா இருக்கே!''

''அந்தக் காலத்திலே பத்துப் பெர்றதும் சரி; இந்தக் காலத்திலே ரெண்டு பெர்றதும் சரி! அந்தக் காலத்திலே போட்டதை உண்ணுட்டுக் கொடுத்ததைக் கட்டிக்கினு சிவனேன்னு திரியுங்க! இப்ப டெர்லின் சட்டை வேணும்; அது வேணும்; இது வேணுமின்னு இதுக படுத்துற பாடு...அப்பாடியோ...! எப்பிடிப் படுத்தினுலும் எனக்குப் பிள்ளைகள் நிறைய இருந்தால்தான் பிடிக்கும்!''

''இப்பவெல்லாம் பொம்புளைப் பிள்ளைகளையே வாரீசா ஏத்துக்கலாமின்னு ஒரு கருத்து வளர்ந்து வருதே! கல்யாண அழைப்பிலே கூட மகள் பெயரைப் போடுகிற வழக்கம் ஏற்பட்டுக்கினு வருதே! இது...?

''அது என்னன்னு? நாம பொம்பிளைப் புள்ளையை வீட்டோட வச்சுக்க முடியுமா? ஆம்பிளைப்புள்ளை இல்லைன்னுலும் பிள்ளை கூட்டத்தான் வேணும்; குடி, வாழையடி வாழையாப் பெருகி வரோனுமின்னு ஆம்பிளை புள்ளை இல்லாம முடியுமா! பொம்பிளைப் புள்ளையைக் கூட்டியாந்து வச்சுக்கினுல் வீடு விருத்திக்காமல் போயிரும். மகள் அவள் வாக்கப்பட்ட வீட்டுக்குத்தான் அதிகாரி. மகள் தாய் வீட்டுக்கு வந்தாக்கூட மகளையும் மாப்பிள்ளையையும் தனியாச்சேர்ந்திருக்க நாம விடுறதில்லே. மகள் இந்த வீட்டுக்குப் பாத்தியப்பட்டவள் இல்லே; அதனுலே அது தாய் வீட்டுக்கு ஆகாது! மகள் ஆத்தாளோடதான் உறங்குவாள்! ஆனுல் மற்ற சாதிகள்லே பலமாதிரிப் பழக்கமிருக்கும்; நம்மள்ளே அப்பிடியில்லே. எத்தனை நாளைக்கு வந்தாலும் மகள் நம்ம வீட்டிலே விருந்தாளிதான்!

''அதனுலே மகள் நம்மளோட நேரடியாச் சம்பந்தப்பட்டவ இல்லேங்கிறியளா? மகமிண்டி அன்னியமிங்கிருதுனுலே பல மாமியாக்களுக்கு மகளைப் புடிக்காமப் போயிருதே; மகளைத்தானே புடிக்கிது!''

''அவுக புரியாதவுக! மகள் வந்தால் ஒரு வாரம் பத்துநாள் இருக்கலாம்; எண்ணிக்கைச் சோறுதான். நாம மகளுக்கு எம்பிட்டுத் தான் போட்டாலும் போட்டிட்டுச் சும்மா இருக்க வேண்டியதுதான். மகமிண்டி அன்னியமில்லே; அவள் நம்ம வீட்டுக்கு வாழ வந்தவள்; மகமிண்டி என்னன்னுதான் பொல்லாதவளா இருந்தாலும் நம்ம வீட்டு நன்மைதின்மையிலே சம்பந்தப்பட்டவள்.''

''அப்ப...நீங்க ஒவியமான மாமியா; உங்க வீட்டிலே துணிஞ்சு பொண்ணைச் சேயலாம்!''

''இன்னிச் சேய எனக்கு மகன் இல்லேயே! எல்லாக் கலியாணமும் முடிஞ்சு போச்சு!''

'' சரி... கடைசியா ஒன்னு! சாகக் கொடுத்த பொண்டுகள் மறு கல்யாணம் பண்ணிக்கினுத் தப்பா?''

''தப்புத்தான்! ஆண்டவன் அவுகளுக்குப் போட்ட புள்ளி அவ்வளவுதான்''

''அப்படிப் பார்த்தா ஆம்பிளைகளுக்கும்தான் ஆண்டவன் புள்ளி போடருன்; பொண்டாட்டி செத்துப் போனு மறுகல்யாணம் பண்ணிக்கலேயா?''

''எல்லாத்துக்கும் ஆம்பிளேக ளோட தோது போடலாமா? ஆம் பிளேக மலேயாவுக்குப் போருக; நாலஞ்சு வருசம் கூட சேர்ந்தாப் பிலே இருந்து பாடுபட்டுச் சம்பா திக்கிருக; அப்ப அங்கே எங்கெங் கேயோ போயர்ருக! ஒருக்கா அரைக்கா எப்பிடியோ இருந் தர்ருக! அதுக்காக எல்லாத்திலே யும் ஆம்பிளேகளோட பொம்புளே கள் தோது போடலாமா? அப்படி யாராவது போடுருகளா? இல்லே யே! அது மாதிரிதான் இதுவும். ஆம்பிளே பண்ணிக்ககலாம். பொம்பிளே மறு கல்யாணம் பண்ணிக்கப்படாது.''

(கோணபட்டு முத்தழகப்பண் ணன் ரெம்ப அதிட்டக்காரர்! எந்த வீட்டு ஆச்சி செட்டியாருக்கு இவ்வளவு சலுகை கொடுக்கிருக! ஒருக்கா அரைக்காத்தான் இன்னு லும் போனுப் போருகன்னு விட மனசு இடங் கொடுக்கணுமே! முத்தழகப்பண்ணன் இந்தச் சலு கையைப் பயன்படுத்திக்கினு களோ, இல்லே வீணுக்கிப் பிட்டாகளோ?)


இன்னம் கொஞ்சம் தைக்கிற மாதிரி சொல்லுங்களே''

''இப்பிடியே விட்டமின்னு முதல்லே விதவை மறுகல்யாணத் திலே ஆரம்பிக்கும்; அப்புறம் ஆமக்கன் உயிரோட இருக்கிற போதே அவன் சரியில்லே; அதனு லே அவனே வெட்டிவிட்டு வேறு கல்யாணம் பண்ணிக்கிறேங்கிற திலே வந்து முடியும்! அப்புறம் பாடுவார் முத்தப்ப செட்டியார் பாடுனுராமில்ல... 'ஏழு தலே முறைக்குப் பிறகு செட்டிய வீடு சங்கரசாதியாப் போயிருமின்'னு; அப்படி இப்பவே போயிரும்.''



வேலூரில் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோவில் பூப்பல்லாக்கு பஞ்ச மூர்த்திகள் திருஉலாக் காட்சி; நகரத்தார் மண்டகப்படி.

91/1



வெற்றிக்குப் பின்னுல் மதிக்கப்படும் தொழில் திரைப்படத்தொழில்..

காரைக்குடி நாராயணன் பேட்டி

தமிழ்த் திரையுலகில் நம்மவர்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. படத் தயாரிப்பாளர்களாக, பட வெளியீட்டாளர்களாக பலர் இருந்திருக்கிருர்கள்; இருந்தும் வருகிருர்கள். அதுபோல நம்மவர்களில் கதை, வசனகர்த்தாவாக, இயக்குநராக உள்ள ஒரு சிலரில் காரைக்குடி நாராயணனும் ஒருவர்.

சுமாரான உயரம்; சிவந்த மேனி; பொலிவான தோற்றம்; அடக்கம்; பணிவு; அமைதியான பேச்சு; கனிவான பார்வை இவர் தான் அந்தக் காரைக்குடி நாராயணன். இவரை நேரில் பார்ப்பவர்கள், 'இவர் 38 வயது இளைஞர்' என்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.


பேட்டி: எல். சுந்தரம்

கவியரசரின் வாழ்த்து

1962ல் காரைக்குடி அழகப்பா கல்லூரி விழாவில் இவர் முதன் முதலில் கவி பாடினுர். விழாவிற்குத் தலைமையேற்ற கவியரசர் கண்ணதாசன் ''உன் கவிதையில் ஆழமான சொல் நயம் இருக்கிறது. முயற்சி செய்தால் உன் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்'' என வாழ்த்தப்போக, ''நாம் ஏன் முயற்சி செய்து பெரிய கவிஞனுகக் கூடாது?', என்ற எண்ணத்தில் சென்னைக்கு இரயில் ஏறினுர், காரைக்குடி நாராயணன்.

தயாரிப்பாளரின் அறிவுரை

சென்னையில் ஒரு படத் தயாரிப்பாளரைச் சந்தித்தார் நாராயணன். ''இனிமேல் நீ வந்து... திரையுலகில் நுழைந்து... முன்



னுக்கு வர முடியுமா? பேசாமல் ஊருக்குத் திரும்பிவிடு''-நல்லெண்ணத்துடன் அறிவுரை கூறினுர் அவர் - படத் தயாரிப்பாளர் கே. டி. சுப்பையா. ஊர் திரும்பாமல் பிடிவாதமாக இயக்குநர் தேவராஜைச் சந்தித்தார் நாராயணன். அதன் பலன் தேவராஜின் ''ஊர்வலம்'' நாடகக் கதையை நகல் எழுதும் பணி செய்ய நேரிட்

டது. பாட்டெழுதிப் பணமும் புகழும்பெற நினைத்தவருக்கு இப்படி ஒரு பணி! இந்தப் பணி நாடகத் துறையில் இவர் அடியெடுத்து வைக்க ஊன்று கோலாகப் பயன்பட்டது என்பது முற்றிலும் உண்மை.

இவர் எழுதிய முதல் நாடகம் 'வீட்டுக்கொரு விவேகானந்தர்'. இது தவிர பதினேழு நாடகங்களை இவர் எழுதியுள்ளார்.

இயக்கிய படங்கள்

இவர் இயக்கிய முதல் படம் ''அச்சாணி''. இதுதவிர ''மீனாட்சி குங்குமம்'', ''அன்பே சங்கீதா'' ''நல்லது நடந்தே தீரும்'' ஆகிய படங்களுக்குக் கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கிறார். இப்போது ''தென்றலே வா'' என்ற படத்தை கதை, வசனம் எழுதி இயக்கித் தயாரித்து வருகிறார்.

இவர் காலஞ்சென்ற இயக்குநர் ஏ. பீம்சிங்கிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

''அச்சாணி''

இவரது ''அச்சாணி'' திரைப் படம், கேரள அரசின் 'சிறந்த கதாசிரியர்' என்ற கௌரவத்தை இவருக்குப் பெற்றுத் தந்தது. அதே படம் 1978 – 79ல் சிறந்த ஏழு படங்களில் ஒன்றாகத் தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டு தயாரிப்பாளர் என்ற முறையில் இவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசையும் பெற்றுத் தந்தது.

இவர் திரைக்கதை, வசனம் எழுதிய ''திக்கற்ற பார்வதி'' படம் குடியரசுத் தலைவரின் பரிசைப் பெற்றது என்பதிலும் இவருக்குப் பெருமை உண்டு.

நாடகத் துறை

''நாடகத் துறையைப் பற்றி உங்கள் கருத்தென்ன?'' என்று இவரைக் கேட்டபோது—

''நான் நாடகத் துறையில் நுழைந்த போது டி. கே. எஸ்., பாலச்சந்தர், எஸ். வி. சகஸ்ர நாமம், சோ நாடகங்கள் பிரபலமாக இருந்தன. அப்போதெல்லாம் உருக்கமான, உயிர்த்துடிப்புள்ள நாடகங்களுக்குத்தான் வரவேற்பு. இப்போது அப்படி இல்லை. கதையே இல்லாமல் கலப்படமாக துக்கடாவாக இருக்கின்றன. பல கட்டங்களில் பொருளே புரியாமல் இருக்கின்றது. நகைச்சுவை என்ற பெயரால் எதை எதையோ செய்கின்றனர். அதனால் புதிதாக நாடகம் எழுத எனக்கு மனமில்லை'' என்றார்.

திரை உலகம்

''திரைப்படத் தொழிலில் நீங்கள் கண்ட அனுபவம்...''

''இது ஒரு நல்ல தொழில். தினமும் விபத்துக்களைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் மனோ தைரியமும் வேண்டும். இத்தொழிலில், வாங்கிய கடனைச்சாப்பிட்டுவிடும் அளவுக்கு வட்டி விகிதங்கள் உண்டு. சொந்தப்பணம் மூலதனமாக இருந்தால் இதற்கு இணையான தொழிலே இல்லை. வெற்றிக்குப் பின்னால் மதிக்கப்படும் தொழில் இது.''

அறிவுரை

''திரைத் தொழிலில் நுழைய ஆர்வம் கொண்ட நம் இளைஞர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?''

''நகரத்தார் எந்தத் தொழிலிலும் தோல்வி கண்டவர்கள்

மணக்கோல மீனுட்சிக்குத் தனிச் சன்னிதானம்!

"இப்போது கம்பத்தடி மண்டபத்திற்கு அருகே மீனுட்சி கல்யாணக் கோலத்தில் காட்சி தருகிருள். அந்த மணக்கோல மீனுட்சியின் பாதத்தைத் தொட்டு வணங்கி, தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிட வேண்டிடும் பக்தர்கள் கூட்டத்தில் கன்னிப் பெண்களே அதிகம். ஒரு சமயம் கன்னிப்பெண் ஒருத்தி மணக்கோல மீனுட்சியின் திருவடிகளைத் தொட்டு கண் கலங்கி நின்றதைக் கண்டேன். "தாயே மீனுட்சி! நீ சொக்கனின் கையைப் பிடித்து விட்ட பூரிப்பில் சொக்கி நிற்கிருயே! நீ பெற்ற மகளான எனக்கு எப்பொழுது ஒரு சொக்கனைத் தரப் போகிருய்" என்பது போன்ற எண்ணங்கள் அந்தப் பெண்ணின் நெஞ்சில் ஓடியிருக்கலாம்! அதை வாய் விட்டுச் சொல்ல முடியாமல் அப் பெண் தவிக்கிருள் என்பதனை உணர்ந்தேன். அந்த இடம் சந்தடி நிறைந்ததாக இருந்தது ஒருவேளை அதற்குக் காரணமாக இருக்கலாம்! திருமணம் பற்றி தம் பெற்ரோரிடம் பேசுவதற்குக் கூச்சப்பட்டாலும் அன்னை மீனுட்சியிடம் அது பற்றித் தயக்கமில்லாமல் முறையிடலாமல்லவா? 'அன்னையிடம் கன்னிப் பெண்கள் மனம் விட்டுப் பேசுவதற்கு ஒரு தனிச் சன்னதியை ஏற்படுத்தினுல் என்ன?' என்ற எண்ணம் எனக்கு அப்போதே ஏற்பட்டது. சில தினங்களில் அறங்காவலர் குழுவைக் கூட்டி அது பற்றி முடிவெடுத்தோம். அதன்படி மணக்கோல மீனுட்சிக்கு தனிச் சன்னதி அமைக்கப் போகிருேம்."

(சிறப்புப் பேட்டியில் மதுரை மீனுட்சி கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார்)

இல்லை. நம்மவர்களில் திறமைக் குறைவானவர்களைக் கண்டு பிடிப்பது அபூர்வம். சந்தர்ப்ப வசத்தால் ஒரு சிலர் தோல்வி கண்டிருக்கலாம். படைப்பாளனுய்ச் சேருவதைவிட பண முதலீடு செய்து சரியானபடி கவனிக்க முடிந்தவர்கள் திரையுலகில் நுழையலாம். நம்மவர்களிடம் ஒற்றுமைக்குறைவு இருக்கிறது. அதைப் போக்க நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.''

பழ. கருப்பையா அவர்களின் தூண்டுதலினுல் 1975ல் 'தமிழ்த் திருமணம்' செய்து கொண்டு மெய்யம்மை ஆச்சியைக் கைப் பிடித்த நம் நாராயணனுக்கு அழகம்மை என்ற 5 வயதுப் பெண் குழந்தை இருக்கிறது. காரைக்குடி 'அன்னையி' வீட்டைச் சேர்ந்த நாராயணன் பல சிறப்புக்களையும் பெற்று தொடர்ந்து கலைச் சேவை புரிய உளமார வாழ்த்துவோம்.

ஆளாக்கிய தந்தைக்கு அஞ்சலி !

கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியாரவர்களுக்கு மணிவிழா. அச்சமயத்தில் அவர்களது சிறப்பியல்புகளைப் பாராட்டி மணிவிழா மலர் ஒன்று வெளியிட வேண்டும் என நண்பர்களும், ஆசிரியர்களும் கருத்துத் தெரிவித்தார்கள். 'மாவன்னா' அவர்கள் மிக அடக்கத்தோடு "எனது சிறப்புக்களுக்கெல்லாம் முற்றும் காரணமாக இருந்தவர்கள் என் அருமைத் தந்தையார் தான். ஆகவே அந்த இனிய வேளையில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அவர்களது வாழ்க்கை வரலாற்றை நூலாக்கி வெளியிடுவதுதான் சாலச் சிறந்தது' எனக்கூறி, மிகக் குறுகிய காலத்தில், ஆனால் மிகவும் செம்மையாக அந்நூல் வெளிவரப் பெரிதும் முயற்சி மேற்கொண்டார்கள். பேராசிரியர் சு. குழந்தைநாதன் அவர்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அளித்து "கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்" என்னும் அந்நூலை மணிவிழா வெளியீடாகக் கொண்டுவந்து தன்னை ஆளாக்கிய தந்தைக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

— மீனாட்சி புத்தக நிலைய
செ. செல்லப்பன்

யோசனை சொல்லுங்களேன் !

இந்த இதழில் மாற்றம் ஏதும் தெரிகிறதா? சுவை, அமைப்பு இவற்றில் புதுமை இருக்கிறதா?

பழ. கருப்பையா இந்த இதழின் ஒவ்வொரு பக்கத்திலும் தனிக் கவனம் செலுத்தியிருக்கிறார். எந்தச் செய்தியாவது உங்களை ஈர்க்கத் தவறி விட்டதா? அல்லது எந்தச் செய்தியாவது நீண்டு வளர்ந்து உங்கள் கழுத்தை அறுக்கிறதா?

யோசனை சொல்லுங்களேன்! அடுத்த இதழுக்குப் பயன்படுமே !

— ஆசிரியர்



பழ.கருப்பையா பதிலளிக்கிறார்

இராம. ஆவடையப்பன்,
குடகு, கர்னாடகா.

தமிழர்ச்சனை எல்லா ஊர்களிலும் நடைபெற என்ன செய்ய வேண்டும்?

ஊருக்கு ஒரு வ. நா. சிதம்பரம் செட்டியார் வேண்டும்! ''ஒரு நாள் 'சீனா தானா' போட்ட உத்தரவைக் கையிலெடுத்துக் கொண்டு குருக்கள் அதிகாலையில் மீனாட்சி வீற்றிருக்கும் கருவறையைத் திறந்து 'மலையத்துவசன் மகளே போற்றி' என்று அர்ச்சனையைத் தொடங்கியிருப்பார். உறக்கம் கலைந்த மீனாட்சி 'இது எங்கேயோ எப்பொழுதோ கேட்ட மொழி போல் இருக்கிறதே' என்று திகைத்திருப்பாள். அப்புறம் அவளுக்கு நினைவுக்கு வந்திருக்கும்; 'ஓ! தமிழல்லவா இது! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஞானசம்பந்தன் வந்து உருகிஉருகிப் பாடுவான்; என்னையும் உருக்குவான்! அப்புறம் ஆயிரம் ஆண்டுகளாகக் காலையில் எழுந்ததிலிருந்து இரவு பள்ளியறை போகும் வரை ஒரே இரைச்சலாக இருக்கும்! அந்த இரைச்சலைக் கேட்டுக் கேட்டுக் காதும் மரமாத்துப் போய்விட்டது. இப்பொழுது வெகு காலத்திற்குப் பிறகு இதைக் கேட்கிறேன். இந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம் என்பது போல சொக்கரைப் பார்த்திருப்பாள்! நம்ம 'நாகப்ப செட்டி சிதம்பரம் தான்' காரணம் என்று சொக்கர் கண்ணைச் சிமிட்டி இருப்பார். அந்தக் கண் சிமிட்டலைத் தாங்க முடியாத தாய் மீனாட்சி சொக்கரின் தோளுக்குத் தாவி அவர் காதில் கிசுகிசுத்திருப்பாள்: ''இதுவரை சொக்கனின் தோளில் முகம் புதைந்து கிடப்பது ஒன்றுதான் இணையற்ற இன்பம் என்று கருதியிருந்தேன். இந்தத் தமிழ் தரும் இன்பம் கூட அதற்கு இணையாக இருக்கிறதே!''

சொக்கர் புன்முறுவல் பூத்திருப்பார்!

கும. கரு. சுந்தரம்,
குருவிக்கொண்டான்பட்டி.

வீட்டில் இருந்து கொண்டு வெட்டிப்பேச்சுப் பேசிப் பொழுதைக் கழிக்கும் ஆச்சிமார்களை எப்படித் திருத்துவது?

உஸ்..ஸ்..! என்ன இவ்வளவு சத்தமாகக் கேட்கிறீர்கள்! இன்னும் கலியாணம் ஆகவில்லையா! தலகாணியைத் தூக்கிக்கொண்டு வெளிப் பட்டாலைக்குப் போக வேண்டியதுதான்! என்னையுமல்லவா சிக்கலில் மாட்டி வைத்து விடுவீர்கள் போலிருக்கிறது!

வி. ஆர். சின்ன அருணாசலம்,
தேவகோட்டை.

பெண்களுக்கு எல்லாவற்றிலும் சம உரிமை அவசியம் தானா?

இப்பொழுது நம்முடைய பெண்டுகள் உரிமையற்று இருப்பதாக

வா நினைக்கிறீர்கள்! ஒரு செட்டியார் வெளியே போயிருக்கும் ஆச்சியை எப்படிக் குறிப்பிடுவார் தெரியுமா? ''ஆச்சி சந்தைக்குப் போயிருக்காக!'' சங்கராச்சாரிக்குக் கூட இவ்வளவு மரியாதை கொடுத்துப் பேசுவதில்லை! செட்டியார் தன்னைக் கலக்காமல் ஒரு காரியத்தைச் செய்து அது சரியாக வராமல் போய்விட்டால் அதைப்பற்றி ஓர் ஆச்சி தன் மகனிடம் எப்படிச் சொல்வார்கள் தெரியுமா? 'நொப்பச்சிக்கு வரவர மூளை வறண்டு போச்சு!''

வ. உண்ணுமலை, மதுரை.

நம் திருமணங்களில் உள்ள 'முறைகள்' என்ற கொடிய பயிரினை அறுத்தெரிந்து சமூகத்தைக் காக்க வல்லவர்கள் செட்டியார்களா? ஆச்சிகளா?

செட்டியார்களுக்கு அந்த வல்லமை இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று. செட்டியார் எவ்வளவு சீமைச் சமர்த்தனுக இருந்தாலும் கலியாணம் என்று வந்துவிட்டால், 'பொம்பிளைகள் இந்த முறைதலைக்கு ஒத்துக்கலை; நான் என்ன செய்யிறது?' என்று ஒதுங்கி விடுகிருர்கள்! மகன்கூடப் 'பொண்ணு பிடிச்சிருக்கு ஆத்தான்னு' எவ்வளவோ சொல்லிப் பார்க்கிருன். நடக்கிறதா? அதற்கு ஒரு ஆச்சி மகனிடம் என்ன சொல்கிருர்கள்? ''அட போடா! துப்பத்த பட்டுக் கிடப்பாய்! எனக்கின்னு வந்து பொறந்திருக்கியே! செட்டிய வீட்டிலே பொண்ணுக்காடா பஞ்சம்! உனக்குக் கிளியாட்டமாப் பொண்ணு நான் பார்த்துப் பண்ணி வைக்கிறேன்! கோணக்குண்டிச் சாலாச்சி அவ மகனுக்கு 'மூணும் அஞ்சும்' வாங்கிச் சேஞ்சிருக்கா; அவ வீட்டிலே என்ன இருக்கு! வீடுங்கிற பேருக்கு ஒரு வீடு; அதிலேயும் இந்தப் பயலுக்கு உள்ள பங்கு 'ஆறிலே ஒன்னுல நாலிலே ஒன்னும்'; இதுக்குத்தான் இம்பிட்டுத் தோது வாங்கியிருக்கா! நமக்கென்ன குறைச்சல்! நீ பேசாம இரு! உனக்கு இன்னம் வியாழ நோக்கம் வரலை!''

> 70 ஆண்டுகளாக 'ராய. சொ.' என்று தன் பெயரைச் சுருக்கி எழுதி வந்த ராய. சொக்கலிங்கனுர் இலக்கணப்படி 'ரகரம்' மொழிக்கு முதலில் வராது என்பதை ஒப்புக்கொண்டு அதன் பின்னுல் 'இராய. சொ.' என எழுதலானுர். 'ஹிந்து' மதாபிமான சங்கம் என்பதில் உள்ள 'ஹி' தமிழ் எழுத்து இல்லை எனச் சுட்டிக் காட்டியபோது அதை 'இந்து' என மாற்றம் செய்து கொள்ளவும் ஒப்புக்கொண்டார்.
>
> -டாக்டர் வ.சுப. மாணிக்கம்
> (மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)

பன்மொழிப் புலவன் ஜெய்ஹிந்த் சேதுராமன் செட்டியார், கோனுபட்டு.

நம் இளைஞர்களுக்கு தமிழ்-ஆங்கிலம் - இந்தி அறிவு அவசியமல்லவா ?

தமிழ்-ஆங்கில அறிவு மிக அவசியம்! ஏனென்ருல் தமிழில்தான் திருக்குறள் இருக்கிறது. பத்துப்

பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் மனிதனை முழுமைப்படுத்த வல்லன! தமிழ் படிக்காத ஒருவன் மூளியாக இருப்பான்!

இன்றைய உலகுக்கு ஆங்கிலம் ஒரு கட்டாயத் தேவை! பிளேட்டோவிலிருந்து பிராய்டு வரை தெரிந்து கொள்ள ஆங்கிலம் இன்றியமையாத் தேவை! உலகின் இண்டு இடுக்கு-மூலைமுடுக்கிலெல்லாம் வெளிப்படுகின்ற சிறந்த 'அறிவை' உறிஞ்சிக் கொண்டு விடுகிற வாய்ப்பை ஆங்கிலம் எப்படியோ பெற்றுவிட்டது! நாம் ஆங்கிலத்தின் வாயிலாகத் தான் உலக அறிவை உறிஞ்சிக் கொள்ள முடியும்.

சரி...! இந்த இந்தி எதற்கு? அதில் துளசிதாசின் இராமாயணத்தையும் ரயில்வே கெய்டையும் தவிர வேறு என்ன இருக்கிறது? இந்தி தெரிந்தால் வடநாட்டுக்குப் போகலாம் என்பீர்கள்! வடநாட்டில் நமக்கென்ன வேலை? என் தகப்பனுருக்குப் பர்மீய மொழி தெரியும்; ஏனெனில் அவர்கள் அங்கே கொண்டு விற்கப் போனுர்கள். எனக்கு ஏன் பர்மீய மொழி தெரியவேண்டும்?

தமிழ், ஆங்கிலம் தவிர ஒருவனுக்கு மூன்ருவது மொழி ஒன்று தெரியவேண்டுமென்ருல் அதற்கான தேவை அவனுக்கு இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் அது வெட்டிவேலை!

வாசகர்களுக்கு

தொடர்ந்த மின் துண்டிப்புக் காரணமாக இந்த இதழ் வெளிவரச் சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது.

— நிருவாகி

"என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது"

நகரத்தார் வாழ்கின்ற முறை, அவர்களது திட்டமிட்ட வாழ்வு, துறைதோறும் அவர்கள் செயலாற்றுகின்ற தன்மை, பொருளை நேரிய வழியில் ஈட்டி, ஈட்டிய அதைத் தாமே உண்டு வாழ எண்ணுது மற்றவர்களுக்கும் வழங்குகின்ற இயல்பான குணம், தமிழுக்கு, கல்விக்கு, கோயில்களுக்கு அவர்கள் செய்துள்ள - செய்து வருகின்ற தொண்டு என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.

— கவிஞர் முடியரசன்
(மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)

★

நமது மாநிலம் 'தமிழ் நாடு' என அழைக்கப்படுகிறது. ஆனுல் மற்ற மாநிலங்களின் பெயர்களில் 'நாடு' என்ற சொல் இல்லை. பல நகரங்கள் 'நகர்' என்றும் 'ஊர்' என்றும் அழைக்கப்படுகின்றன. ஆனுல் நகரத்தார் வாழும் பகுதி 'செட்டிநாடு' எனக் கூறப்படுகிறது. இது ஒரு தனிச் சிறப்பு.

— கவிஞர் முடியரசன்
(மதுரை நகரத்தார் சங்கக் கூட்டத்தில்)

மைமற்ற தாக்கல்கள்...

ஒக்கூரில் மணி விழா!

பிரபல தொழிலதிபரும், சிவ கெங்கை ஊராட்சி ஒன்றியத்தின் முன்னாள் தலைவருமான திரு. சிக. அரு.சோம.இராம நாதன் செட்டியார் - கண்ணாத்தாள் ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா ஒக்கூரில் 8-9-1982 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவன்று காலையில் தேவார இசையும் அதையடுத்து திருவிழா ஆர். ஜெயசங்கர், வலையபட்டி ஏ. ஆர். சுப்பிரமணியத்தின் நாதசுர - தவுல் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

நண்பகலில் மணி விழா மலர் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர் ராஜா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் மணிவிழா மலரை வெளியிட அதை தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெற்றுக் கொண்டார். பின்னர் டாக்டர் ராஜாசர் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திரு. கருமுத்து தி. கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். ராஜாசர், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திருமதி உமையாள் இராமநாதன், திரு. எம். எஸ். ஆர்எம். மெய்யப்ப செட்டியார் ஆகியோர் மணி விழாத் தம்பதியை வாழ்த்திப் பேசினார்கள்.

மணிவிழா மலர்க் குழு ஆசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் மலரைச் சிறப்புறத் தயாரித்து வெளியிட்டமைக்காக ராஜா சர் அவர்கள் அன்னாரைப் பாராட்டி பொன்னாடை அணிவித்தார்கள்.

மணி விழாத் தம்பதியைப் பாராட்டி மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. சுப. அ. நடராஜன் செட்டியாரும் மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் சார்பாக அறங்காவலர் குழுத்தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரும் பொன்னாடை அணிவித்தார்கள். ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் சார்பிலும் ஒக்கூர் நாட்டார்களின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப் பெற்றன. பல நிறுவனங்களின் சார்பில் வாழ்த்துப் பாக்கள் வாசித்தளிக்கப் பெற்றன. திரு. இராவன்னுமானாவின் பேத்தி செல்வி உமா வாழ்த்துப் பா ஒன்றை வாசித்தளித்தது. நிகழ்ச்சியின் இறுதியில் திரு. இராம. சோமசுந்தரம் நன்றி கூறினார்.

மாலை 5 மணி அளவில் திரைப் படஇசையமைப்பாளர்கள் சங்கர்-கணேஷ் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் இரவு 10-30 மணி அளவில் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன.

புதுமனை புகுவிழா

மதுரை சௌராஷ்டிராக் கல்லூரியின் வணிகவியல் பேராசிரியரும் பொற்கிழிக் கவிஞருமான சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் தாம் புதிதாகக் கட்டியுள்ள வீட்டில் 29-8-82 அன்று புதுமனை புகு விழா நடத்தினார்கள், இவ் விழாவில் தொழிலதிபர்கள் திரு வாளர்கள் லெ. அழகுசுந்தரம் செட்டியார், வி. என். சிதம்பரம் செட்டியார், சிக. அரு, சோம. இராமநாதன் செட்டியார், கரு முத்து எஸ். சொக்கலிங்கம் செட்டியார், எஸ். முத்துராஜா செட்டியார், இராம. முத்துப்பழனியப்ப செட்டியார், ராம.லெ.ராம.லெ. லெட்சுமணன் செட்டியார், டாக்டர் வ. சுப. மாணிக்கம் மற்றும் நகரத்தார் பிரமுகர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருமணம்

பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார் அவர்களின் பௌத்திரியும் திரு. நாகப்பனின் மகளுமான செல்வி காமாட்சிக்கும் ஒக்கூர் சி. கரு. சி. சித. சிந. சித. அண்ணாமலை செட்டியாரின் மகன் செல்வன் சிதம்பரம் என்ற கருணாநிதிக்கும் 22-8-82 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

ஒக்கூர் சிக. கரு. கண. இராமநாதன் செட்டியார் அவர்களின் பௌத்திரியும் திரு. இரத்தினத்தின் மகளுமான செல்வி விஜய லெட்சுமிக்கும் கண்டரமாணிக்கம் மு. சி நா. நாச்சியப்ப செட்டியாரின் மகன் செல்வன் மீனாட்சிசுந்தரத்திற்கும் 1-9-82 அன்று ஒக்கூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழா

நாட்டரசன்கோட்டை திரு. சுப. ராம. லெ. சுப்பிரமணியன் செட்டியார் - திருமதி உமையாள் என்ற கல்யாணி ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 26-9-82 அன்று நாட்டரசன் கோட்டையில் சிறப்பாக நடந்தது.

ஃ ஃ ஃ

கோட்டையூர் திரு ராம. அழ. சித. அழ. அண. அழகப்ப செட்டியார்-பார்வதி ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 29-9-82 அன்று கோட்டையூரில் சிறப்பாக நடந்தேறியது.

புதுக்கோட்டையில் ஒரு நகர விடுதி

புதுக்கோட்டைக்கு வரும் நமது வெளியூர் நகரத்தார்கள் தங்குவதற்காக 1-10-1982 முதல் நகர விடுதி ஒன்று செயல்படத் தொடங்குவதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் சமூக ஆண் பெண்கள் அனைவரும் அச்சமின்றித் தங்குவதற்கு வேண்டிய வசதிகளுடன் கூடிய நகர விடுதி ஒன்றை மார்த்தாண்டபுரம் முதல் வீதி, 49ஆம் இலக்கமுள்ள இல்லத்தில் நடத்தி வருகிறோம்.

புதுகைக்கு வருகை தரும் நம் சமூகத்தினருக்கு சங்கம் நல் வாழ்த்துக் கூறி வரவேற்பதில் மெத்த மகிழ்ச்சி கொள்கிறது.

— இவ்வாறு புதுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. சித. இராமன் செட்டியார் அறிவித்துள்ளார்.

காலமானார்

நாட்டரசன்கோட்டை வெ கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள் அண்மையில் காலமானார்கள் என்பதை அறிய வருந்துகிறோம். தொழிலதிபரும், தர்ம சிந்தையுடையவருமான அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

எங்கள் சங்கம்

மதுரை நகரத்தார் சங்கக் கூட்டம்

மதுரை நகரத்தார் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 26—9—82 அன்று நகர விடுதியில் துணைத் தலைவர் 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் தமிழண்ணல் வரவேற்புரை நிகழ்த்தினர். கவிஞர் முடியரசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினர். கவிஞர் முடியரசனைப் பாராட்டி கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம், டாக்டர் சுப. அண்ணாமலை ஆகியோர் பேசினர்கள்.

'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் தலைமையுரையாற்றும் போது "தமிழ் காக்கபோர் செய்ய புலிகள் வேண்டும் தடுமாறி ஒட விட எலிகள் வேண்டாம்" என்ற கவிஞர் முடியரசனது கவிதை வரிகளை வெகுவாகப் பாராட்டிப் பேசினர்கள். செயலாளர் இராம. ஏகப்பன் நன்றி கூறினர்.

கோவை நகரத்தார் சங்கப் பாராட்டு விழா

கோவை நகரத்தார் சங்க விழாக் குழுவினர், ஒக்கூர் சிக.அரு.சோம. இராமநாதன் செட்டியார் — கண்ணத்தாள் ஆச்சி மணிவிழாக் கண்டதை யொட்டி 26-9-82 அன்று நடத்திய பாராட்டு விழாவிற்குச் செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் தலைமை தாங்கினர்கள்.

இராம. ஏகப்பன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

கோவை நகரத்தார் சங்கத் தலைவர் எஸ். சுப்பையா செட்டியார்; முன்னாள் தலைவர் எல். சோமு, கருங்குளம் ரெங்கநாதன் செட்டியார், கலைமகள் இராம. இராமநாதன், செல்ல கணபதி, எஸ். எம். ரெங்கநாதன், ஏ.எல். எஸ். அழகப்பன், வி. காளைராஜா வி. ஆர். கண்ணப்பன், ஆர். சேக்கப்பா, மெ. சு. இளங்கோ ஆகியோர் வாழ்த்துரைத்தனர்.


சிறப்பு விருந்தினராக காரைக்குடி, பழ. கருப்பையா கலந்து கொண்டு பாராட்டினர்.

நகரத்தார் சங்கச் செயலாளர் ஏ. நடராஜன் நன்றி கூற இரவு விருந்துடன் பாராட்டு விழா இனிதே முடிவுற்றது.


வேலூரில் புஷ்பப் பல்லக்கு

வடஆற்காடு மாவட்ட நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 29—8—82 அன்று வேலூரில் அதன் தலைவர் திரு. பி. ஆர். மெய்யப்ப செட்டியார் இல்லத்தில் நடைபெற்றது. அப்போது வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோவில் புஷ்பப் பல்லக்கு விழா தொடர்பாக பொறியாளர் திரு. என். காசி விஸ்வநாதன் செட்டியார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதன்படி 4—9—82 அன்று புஷ்பப் பல்லக்கில் பஞ்ச மூர்த்திகளின் திரு உலா விமரிசையாக நடைபெற்றது. விழாவையொட்டி வேலூர் கீதாலயா குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.



நாகப்பா ஆட்டோமோபைல்ஸின் சென்னைக் கிளையை செட்டி நாட்டரசர் திறந்து வைக்கிறார். படத்தில் RM. முத்தழகப்ப செட்டியார், S. முத்துக்கருப்பன் செட்டியார், பாங்க் ஆப் மதுரை யின் தலைவர் RM. முத்தையா, டாக்டர் MR. முத்தையா, V. G. பன்னீர்தாஸ் ஆகியோர் உள்ளனர்.



ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார்-கண்ணாத் தாள் ஆச்சியின் மணி விழாவில் வி. என். சிதம்பரம் செட்டி யாரின் நகைச்சுவைப் பேச்சை ரசிக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார், ராஜா சர் முத்தையா செட்டியார், கருமுத்து தி. கண்ணன் ஆகியோர்.

Regd. No. TN MA(C) 106

